உ
சிவமயம்.
ஜெகதீசன்றுணை.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
29 JUL 1911
MADRAS.

ஏரல்மாநகரிலெழுந்தருளிய

ஜெகதீசன் சேர்மெனவதாரக்

கும்மி.

இஃது
ஏழாயிரம்பண்ணை ஷத்திரியகுல சிகாமணி
புதுமாலெய்யநாடாரவர்கள்
குமாரர்
சிவத்தகருப்பையா நாடாரவர்கள்
இயற்றியது.

ஷத்திரியகுல சிகாமணிகளாகிய நாடார்கள்.
விரும்பிக் கேட்டுக்கொண்டபடி

ஷை சிவத்தக்கருப்பையா நாடாரவர்களால்,
மதுரை வடக்குமாசிவீதி
இ. ரா. ம. குருசாமிக்கோனாரவர்களது,
ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1911.

இதன் விலை அணா 10.

144719

O-,85MSK4,E
N11

உ

சிவமயம்.

ஏழாயிரம்பண்ணையிலிருக்கும் மகா-ா-ஸ்ரீ

மகாகனத்தங்கிய ஷத்ரியகுலசிகாமணி

எ. கா. ம, வேலப்பநாடாரவர்கள்

இயற்றியது.

சாற்றுக்கவிகள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. REGISTERED 29 JUL 1911

வேத பாரகர் வேதங் களோதுக
மாத மூன்றுமழை வரிசித்திடும்
ஏதம் நீக்கி யினிதர சேந்தலால்
பாதகங்கள் பஞ்சா கப்பறக்கு மே.

14 4719

கடல்மதுவுந் தரைமதுவுங் ககனவுறுங் கலின்மதுவுங்
கடந்த முக்கண்
மிடல்கடுவுஞ் சடைமதியும் வெண்பொடியுந் திண்புலியின்
விரிந்த தோலும்
அடல்கரிதோல ரவென் போடருள் கொன்றையாசர்
மறையமர்ந்த தேனும்
மடலெழு தொணுதுமையு மாடலின விருந்தரசு
புரிந்த நாட்டில்

O-,85M1K (N1)

பதமுரவே ஞாயமதைப் பகுந்துபேசப் பாற்கடலிற்பாயல்
தன்னிற் பள்ளிகொள்ளுஞ்
சததளபூவுந்தி யனைச்சரியாய்ச் சொல்வோன்றயா குணனும்
புவியரசன் றானேயென்னும்
கதலிகனிந் தொளுகுமெயில் நகரந்தன்னிற் கல்விபுகள்
ஞானமதைக் கருதுமய்யன்
இதமுருபாலகனே சங்கரலிங்க யேந்தலுஞ் சேர்மன்கும்மி
யினிக்கு மென்றான்.

சந்தசகஸ் திரப்பழனந் தன்னில்ஞானந் தயவுகுண வீரபுத்திர
சான்றோனுக்கு

யெத்திசையுங் கீர்த்திபெரும் வயிரக்காளை யின்பமுரு தவத்
மகவாய் வந்தோன் [தாலும்

சித்தர்பத்த ரிடர்தீர்க்குஞ் சேர்மச்சாமி சிறந்ததிரு யேறல்தனி
விருந்த கும்மி

முத்தர்மனங் களித்திடவே மொழியவென்று முக்கியமா முதல்
முயற் சித்தானே. [வணை

தக்கசதுர் மறைகமழும் பிரமன்மாலுந் தமதரிவுக் கெட்டாமற்
றகவே நின்ற

முக்கணனைத் தினம்வணங்கும் வேள்சின்னக் கருப்பய்யா முய
தவத்தால் வந்த [ன்றதிருத்

திக்கனைத்துங் கீர்த்தியுநற் குணமிகுத்த வயிரமன்னன்
சேர்மென் கும்மி

சொக்கலிங்க மன்னனிடம் வந்திருந் தாலோசனை
சொல்லச் செய்தான்.

சீர்சிறக்குஞ் செல்விநகர் தன்னில்ஞானந் தெளிந்ததெட் சணா
சிறந்த நூலை [மூர்த்தி

பேர்சிறக்கக் கற்றகருப் பய்யாதன்பாற் பிரைசூடுஞ் சேர்மென்
கும்மி பேச [மேற்

யேர்சிறக்கு மகாலிங்க யேந்தலோனுக் கிருகண்ணின் மணியெ
மிருபேர் தன்னில் [னவு

வார்சிறக்குங் குவிமுலையார் மருவியபேற் சொக்கலிங்க
மன்னன் சொன்னான்.

கார்பூத்த கண்ணனொடு பிரமன்றேவர் கயிலைதன்னி லீசனொடு
கலந்து பேசும்

பார்பூத்த யின்னல்பிணி தவிற்கயீசன் பரஞ்சுடரே யேறல்பதி
ராமசாமி

சீர்பூத்த செல்வனெனப் பிறந்தயாருஞ் சேர்மனெனத் துதிக்க
செய்வான் கும்மி [வருள்

ஏர்பூத்த வேள்புதுமா லய்யன்றோன்ற லெனுஞ்சிவத்தக் கருப்
யியம்பி னானே. [பய்யா

சொன்னதொரு கும்மிதிருச் செவியிலூட்டத் தூயதிரு மாலவ
    சுரர்கட் காக [னுஞ்
நன்னதொரு பாற்கடலின் னமுர்தம்வாரி நாவுருசி யெனச்சொ
    நயத்தோ டீந்த [லவே
வன்னதொரு வமுர்தமன்று கடைவதென்று வமரர்களும் வாய்
    வறைய லானர் [திரந்து
இன்னதொரு நம்மலையிற் பிறந்தடமிழ் கின்றுபயன் பெற்றதென
    முனிவ னோர்ந்தார்.

சாத்தூர் மகா-ா-ஸ்ரீ கனம் ம. செ. க. நா. வட்டக்கடை ஏஜண்டு, கனகசபாபதித்தேவரவர்கள் இயற்றியது.

சீர்பெருகு மேறல் நகரிராமசாமிப் பெயரோ
    னீன்ற செல்வன்
பார்பெருகு மன்பர் வினையகற்று மருணாசலச்சேர்மன்
    பதத்திற் கும்மி
ஏர்பெருகு மெயில் நகரமேவு புதுமாலய்யனுக்
    கினிய மைந்தன்
தார்பெருகுங் கலையுணர்ந்த தமிள்வல்லோனே சிவத்தக்
    கருப்பையா சாற்றினனே.

கலைமகளு மந்தணன் றன்னாவிலுற்றாள் கலசமுனி
    மலையிற் புக்கான்
உலகமுழுவதுஞ் சுமக்குஞ் சேடனும் போய்ப்பாதலத்தி
    லொளித்தான் மற்றை
பலகலைதேர் புலவர்களிக் கும்மியைக் கேட்டதிசயித்துப்
    பரிவு கூர்ந்தார்
இலகுமெழுத்தும் பொருளுமணியாப்பு மின்பமுட
    னிசைந்த மாதோ.

ஏழாயிரப்பண்ணையில் மகா-௱-௱-ஸ்ரீ கனந்தங்கிய
க்ஷத்ரியகுல சிகாமணி

ம. செ. வீ. ருமய்யா நாடாரவர்கள்

இயற்றியது.

மதிநதிச் சடையோன் மான்மழுகரத்தோன் மானிலத்
 திருளது நீக்க
துதிபதி யென்னுமேறல் மாநகரிற் றேன்று
 மிரண்டாம் வருணத்து
அதிபதி ராமசாமி தன்மகவா யருளருணு
 சலக் கும்மி
நிதிபதி சிவத்தக் கருப்பய்ய பூமன்னிகள்த்தினன்
 பூமகள் வியப்ப.

செல்லியாபுரம் மகா-௱-௱-ஸ்ரீ கனந்தங்கிய அருணாசலப்
புலவரவர்கள் குமாரர் உபாத்தியாயர் ஸ்கூல்மானேஜர்

சரவணப்பெருமாள்ப்புலவரவர்கள்.

இயற்றியது.

பூவுலகோரரியதவ முயனுஞ் சிவமூர்த்தி புகளுமிகயேறல்
 நகரதனி லின்றுள்
மேவியருணசல மென்றோர் நாமம்பெற்று நிஸ்ட்டை
 விரவிற் செய்தே
காவலவுதாம் பிரநதிக் கரையருகில் வாழ்சேர்மக்
 கடவுள் கும்மி
மாவிலுயர் முதிர்கனிபோலே சிவத்தக்கருப்பய்யா
 வழுத்தி னனே.

ஏழாயிரப்பண்ணையில் மகா-ா-ா-ஸ்ரீ மகாகனந்தங்கிய
ஷத்ரியகுல சிகாமணி

த, மு, அ. அ, இராமய்ய நாடாரவர்கள்

இயற்றியது.

எத்திசையும் புகழ்ந்தேத்தும் வேணியீசனின்ப முருங்கயிலை
தன்னிலிசைக்கு மாபோற்
பத்தியுருதவ முடையோர் வசிக்குமேறற்பதி ராமசாமி
மன்னன் பாலனாகி
சுத்தியடி தொழுதவற்குத் துயரைப்போக்கித் தொல்புவியிலிருந்
தருள்வான்
கும்மி சொன்னான்
சித்திதருமெயில் நகரந்தன்னிலே சிவத்தக்கருப்பையா
செயலோனாக.

ஏழாயிரம்பண்ணை மாரியம்மன் கோவில்
சன்னதியில் அரங்கேற்றிய போது
அப்பணம்பட்டி ம-ா-ா-ஸ்ரீ
கலியாணசுந்தரப்புலவ
ரவர்கள் குமாரர்

முத்துக்குமாருப் புலவரவர்களால்

இயற்றியது

தருச்சிறந்த சீக்காச்சி நகரில் வாழுந்தாய்பத்திரகாளி
தனதருளினாலே
திருச்சிறந்த யேழாய்ரம் பண்ணை தன்னிலே சிவத்தக்கருப்
பையா
சிறந்த சான்றோன்
அருட்சிறந்த யேறல்பதி ராமசாமி யருள்பாலனே யருணா
சலமேற் கும்மி
தெருட்சிறந்த சிவனிவனைப் பிறந்ததாலே சேர்மனெனக்கவிக்க
மைத்துச்
செப்பினானே

ஆனதொரு வாயிரத்தி யெண்பத்தாரி லயனுரைக்த மீநுனாவி
யிரண்டாந் தெய்தி
பானமது தசைவிரும்பு மசுரராசானெனப் பகரும் வாரமதிற்
பக்லே செல்ல
தீனர்பிணி தீர்த்தருளுஞ் சேர்மன்கும்மி திருமெயில்மாநகரில்
மகமாயி முன்னே
ஞானமுணர் சான்றோற்குத் திலதம் போல்வா னருள் சிவத்தக்
கருப்பய்யா வரங்கேற்றினனே

மதுரமிகு கனிரசமோ பாகோதேனோ மகிட்சிதருங் சற்கண்
மலரிற் றூதோ [டோ
புதுமைதருமினிய சுவைப்பாலோ மேலோர் புத்தமிர்தோ சேர்
புகன்ற கும்மி [மன்மேற்
சதுர்மறைகள் பரவுமெயில் நகரந்தன்னிற் றரணிபுகழ் மகாலிங்
றவத்தால் வந்தோன் [கன்
யெதுவுமொரு அறுபொருளை யுணர்ந்துரைக்கும் வேலப்பயேந்
யின்புற்றனே [தலுமே

வியந்தெவரும் புகலுமெயில் நகரந்தன்னில் வீரபுத்திரவேந்த
னருள்தவத்தால் வந்த
நயந்தருநற்குண மிகுத்து ஞானமுருங் கல்விதனை நயமாக்
கற்றோன்
செயந்தருமி ராமய்யனென்னும் வள்ளற் சேர்மனுமேற் கும்மி
செய்யுள் கேட்டு [யெனுஞ்
வயந்தருமா மறைமலர் வாழ் வாணிதானு மகிழுமென மனதினி
மதித்தான் மாதோ [லே

இனிமைதரு மிளிர்தமிழி னருளினரன் சேர்மவதாரக் கும்மி
யிதமாக் கேட்டு
கனிமைதரு ருசியில்மிகு கரும்புடைந்து கயலினுருமதுர ரசக்
காலே வோடி
பனிமைதரு பயிர்வளரு வயலினில் பாய் யெயில்நகரிற்
பண்பாய் வாழ்வோன்
தனிமைதரு மரசனரி சுரபுத்திரனருள் புதல்வன் ராமய்யா
சரியென்றனே

உ

சிவமயம்.



ஜெகதீசன்,

சேர்மனவதாரக்கும்மி.

விநாயகக்கடவுள் காப்பு விருத்தம்.

அற்புதஞ்சே ரேறல்நக ரதனிலீச
னடிதொழுகுமி ராமசாமி யெனுமோரரசன்
பொற்புயருங் கற்புடைய மாதுபாரி
புண்யவதி திருவயிற்றிற் புகழேபூணுந்
தற்பரனே பிரந்திருபத் தெட்டாமாண்டிற்
றத்துவமா ந்திசையதனிற் சமாதியாகிப்
பற்பலர்சங் கடந்தீர்க்கு ஞ்சேர்மன்கும்மி
பாடுதற்குப் பஞ்சகரன் பதங்காப்பாமே.

கும்மி.

விநாயகர் துதி.

கங்கை சடையிற் றரித்தவன் கையிற்
கனியொன்று வாங்கக் கடுமையதாய்
எங்கேயுஞ் சுற்றுமலிங்கேயே சுற்றிமுன்
னேத்தவன் பொற்பதமே துணையே. (1)

சரஸ்பதி துதி.

அண்டமமழந்த வனுந்தியில் வந்திடு
மாதி மலர் மேலயனுவிற்
பண்டேறிய வாணிசேர்மக் கடவுள்மேற்
பாடவென்னுவிற் பதி விருப்பாய் (2)

சுப்பிரமணியர் துதி.

துள்ளி மயில்மீதி லேரி விளையாடுஞ்
சூரர் சிரங்கள் துணித்தவனே
வள்ளிக்கி நாயகா சேர்மக்கடவுள் மேல்
வாஞ்சையாய்ப் பாடவர மருள்வாய் (3)

ஈஸ்பரி துதி.

மலையத்துவசன் மகளெனத் தோன்றியே
மதுரை நகரத் தரசாண்ட
தலைவியே சேறுமச்சாமிமேற் கும்மி
தளைக்க வரங்கள் தருவாயே (4)

பெரியோர்கள் துதி.

ஆருசமய மடங்கு மறைக
ளகத் துளடக்கும் பெரியோரே
பேருபெருமேறல் சேர்மக்கடவுள் மேற்
பெட்புடன் கும்மி நான் சொல்லுகிறேன் (5)

சான்றோர் குலத்தி லுதிக்குங் கருப்பய்யா
தாசன் சேர்மன் மீதிற் கும்மி சொல்ல
ஆன்றோர் தெளிந்தோ ரறிவுடை யோர்களே
யன்பாக யென் மேலருள் புரிவீர். (6)

குத்தங் குறைகளிருந்தாலு முங்கள்
குழவிகள் வாயாற் குழறியபோற்
சித்தந்தெளிந்து சிரித்து விளையாட்டின்
செய்கையைப் போலுந் தெளிவீரே (7)

தருமந்தழைக்குங் குணங்கள் மிகுந்திடுஞ்
சாதுக்கள் சற்சனஞ் சார்ந்தோரே
அருமறைபோற்றிடுஞ் சேர்மன் கும்மி சொல்ல
அன்புவைத்தென் மேலருள் வீரே (8)

கதையின்வரலாறு.

தரணிபுகழ் ஜில்லா ராசமயேந்திரந்
தன்னில் வசிக்குஞ் சதாசிவய்யர்
சுரதமணி யென்னும் பத்தினியாளுக்குந்
தூயபுதல் வர்கள் தானுமில்லை (9)

புத்திரரில்லா வருத்தத்தி னுலவர்
புண்ணிய தீர்த்தங்களாட வென்று
சித்த த்திலெண்ணி யிருவருமேகியே
சேர்ந்து கோதாநதி வந்தடைந்தார் (10)

சதா சிவமய்யருஞ் சுரதமணியாளுந்
தானே யிருவருங் கைகோர்த்து
பதாம்புயனேசிவா பாந்தழனே சிவா
பாலகன் தாவென்று முங்கினரே (11)

முங்கியெழுந்து கரையேறி யவர்
முன்னும் பின்னுமாகத் தானேகி
அங்கி நிறத்தவனைத் தொழு மார்க்கண்ட
வையன் தவத்தலம் போய்ச்சேர்ந்தார் (12)

மார்க்கண்டேஸ்வரன் தன்னைத் தொழுதவர்
வரமருள் பாலக னெங்களுக்கு
கார்க்குங் கருணைகரனே மார்க்கண்டனே
காலனை வென்றவா வென்றுரைத்தார் (13)

சன்னிதானத்திலே மார்க்கண்டர் பாதத்திற்
றானே விழுந்தாரிரு வோரும்
ம்ன்னுஞ் சதாசிவமய்யர் தனக்கு
மயக்கம் வந்து புத்திமாறினதே (14)

பேரறிவாகிச் சதாசிவ மய்யற்குப்
பேசுங்கை லைத் தலமாகி
ஆரறிவாகுஞ் சிவனைச் சதாசிவ
னடுத்தவன் போலு மிருந்தானே. (15)

முப்பத்து முக்கோடிதேவர்முனி வரும்
மூவரோடு மங்கே தானிருந்து
செப்பிய தன்மையுஞ் சேர்மன்பிறந்ததுந்
திட்டமாய்ச் சொன்னான் சதாசிவற்கு (16)

பிறந்து யிருபத்தெட்டாகும் வயதினிற்
பேருலகோரெனத் தான் மரித்து
கரந்து சமாதிக்குள் தானிருந்தவுடன்
கண்காட்சி காட்டுறே னென்றுரைத்தான் (17)

அங்கே நீவந்தபின் சுரதமணிக்கிரு
வாணும் பிறக்குமென்றே யறைந்து
நங்கையிடப் பாகம்வைத்த கடவுளும்
ஞானவறிவையுந் தான் மறைத்தான் (18)

சொற்பனங்கண்டு முழித்துச் சதாசிவன்
துள்ளி யெழுந்து மேயன்னேரம்
பற்பலவாக நினைந்து சுரதைதன்
பத்தினியைப் பார்த்து யேதுசொல்வான் (19)

மயக்கம்போல் வந்துநான் சொற்பனங்கண்டேனே
மங்கை சுரதமணி யாளே
தியக்கந்தெளிந்திடக் கண்ட கனவைப்போற்
றேவருங் காண முடியாதே. (20)

கண்ட கனவது நல்லதேயாகுமே
காரணமான யென் பத்தாவே
விண்டுயெனக்கு நீராதி யோடந்தமாய்
விபரம் விளங்கவே சொல்லுமென்றாள் (21)

சுரதமணியவள் சொல்லெனச் சொல்லவுத்
தூயசதா சிவமய்யரு மே
வரதனுரைத்த சொல் ஞாபகமாய்க்கேளு
மாதேயென்று வழுத்த லுற்றான் (22)

சதாசிவமய்யர் பத்தினியிடத்தில் தான் கண்ட கனவைச்சொல்லுதல்.

சொன்னதைக் கேளடி தூயபுவி மீதிற்
றோளினில் வீணையுந்தான் தூக்கி
இன்பமான யிசைப்பாட்டுடன் கூட்டியே
யெய்தினன் நாரதமா முனியும் (23)

காசிவிஸ்வேசர் முதலான தலங்
கன்னியாகுமரி தலம் வரைக்கும்
பேசுஞ்சிவாலய மாயிரத் தெட்டையும்
பெருமையாய்ப் பாடித் துதித்தானே. (24)

தலங்களிலெங்கேயுஞ் சாருஞ் சனங்கள்
தரிசிக்க வந்திடுஞ் சங்கமதை
யிலங்குங்கரத்தினில் வீணை பிடித்து
யிசைபாடும் நாரதன் பார்த்தானே (25)

எத்தலந்தன்னிலுங் கைத்தலங் கூப்பியே
யேங்கிச் சனங்களிறக்கமுடன்
பத்தன்களல்லவோ வெங்கள் வியாதியைப்
பாரா திருக்கிறீ ரீஸ்பரனே (26)

கோவிலில்வந்தேனே கும்பிட்டு நின்றேனே
கூடும் வியாதி குறையலையே
ஆவிதுடிக்குதே பாவியே தெய்வமீ
அலகையோ வென்று வயர்வாரே (27)

இடரினைத்தீர்ப்பவ ரில்லையென் பார்சிலர்
இங்கே தெய்வமில்லை யென்றுரைப்பார்
விடலையெறிந்ததும் பொங்கலு மிட்டதும்
வீண்ஞ்சேத மென்றுமே வீம்மிடுவார் (28)

யீசன்செயலை யறிந்து மறியாமல்
யேற்றமுறை விட்ட யேதுவினால்
பாசமானபிணி தீர்க்குங் கடவுளும்
பாவிக்கெப்படி யருள் புரிவார் (29)

இந்தவுலகுக் கிடுக்கங்கள் தீர்த்திடு
மேக பரம பரஞ்சோதி
விந்தையதான சுகந்தர மாட்டாரே
மேலும் விதிமுறை யெப்படியோ (30)

எள்ளுக்குளெண்ணெ யிருப்பது போலவே
யீச னிவர்க ளிடத்திருக்க
விள்ளும்படியான வேதமுறை சொன்ன
வித்தகத் தொழில்விட் டதினாலும் (31)

வேதியர்வேத முறைப்படி வேதங்கள்
வேண்டியே யோதா ததினாலும்
சாதிமுறைப்படி தானட வாமற்
றவரி நடந்த முறையாலும் (32)

பஞ்சமாபாதகஞ் செய்கின்ற பாவிகள்
பாருலகிற் செய் வினையாலும்
தஞ்சமென்றோர்களை வஞ்சகஞ் செய்கின்ற
சண்டாளர் மிகுத்த ததினாலும் (33)

கார்மேகமானது கூடிப் பொழியாதே
காசினிக்கென்று கருத்தி லெண்ணி
பேர்பெருவீணை பிடித்திடு நாரதன்
பேசாமலே பெரு மூச்சுவிட்டான் (34)

பெருமூச்சுவிட்டிடும் நாரத மாமுனி
பேதக மான மனதோடு
சிறியோர்கள்செய்த பிழைபொறுக்க வேணுந்
தேவனே யீஸ்பரா வென்றுரைத்தே (35)

வைகுந்தந்தன்னிலே வீற்றிருக்குந் திரு
மாயவனே யருள் கேசவனே
ஐம்பொறிகெட்டுக் கரிமூல மென்றிட
வங்கராக் கொன்றருள் தந்தோனே (36)

இரணியகான்வீர சூரனென்றே யவ
னெல்லாப் புவனங்க ளாண்டவனை
நரசிம்மமாகவே நெஞ்சைப் பிளந்தாயே
நம்பன் சகாயனே நாரணனே (37)

திரளான பூமியில் மூவடிமண்ணுந்
தியாகமா வேணுமெனக் கேட்டுக்
குரழனென வந்துலகத்தை வோரடி
கொண்டவனே சோதிக் குண்டலனே. (38)

கல்லுருப் பெற்றவகலியின் பாரையைக்
கால்படுந்தூசி களிந்து பட
மெல்லியளாகிய ரூபம் பெறச்செய்த
வேதியனே மூல வேதகனே (39)

பாம்புக்கொடியை யுயர்த்திய வோனையும்
பாரமுரசக் கோடி யோனையும்
வீம்புக்குப் பாரதமுண்டு பண்ணியவர்
வீரந் துலைத்திடும் வேதியனே (40)

யென்றுமே நாரதமாமுனி வீணை
யிசைபாடி யெங்குந் துதிக்கையிலே
கன்றையெறிந்து கனியன்றுதிர்த்திடும்
காரணன் பாதமதைப் பணிந்தான் (41)

அனுதினங்கிரிகை தவங்கள் யாகஞ்செய்ய
வந்தணர்கட்குவுதவி செய் தோன்
மனுவென்னு சக்கரவர்த்தி முறமை
மறந்தனரோ சான்றோரென் றுணர்ந்தான் (42)

சாகரந்தன்னிலே கங்கை நிறப்பிடச்
சத்திரிய குலத்துப் பகிரதனும்
யூகத்திலந்தணர் தங்கட் குதவி
யுகந்துபுரிதவ மென்றுணர்ந் தான் (43)

அறுபதினாயிரமாண்டு வரசாண்ட
வையன் தசரதச் சக்கரவர்த்தி
குருவுரையின்படி யந்தணர் கட்குக்
கொடுத்துதவி யதை தானுணர்ந்தான் (44)

சூரியகுலத்தி லுதித்திடுஞ் சத்ரியர்
சொன்ன குருமொழி தப்பாமல்
ஆரியர்தங்கட் குதவிடுஞ் செய்கையா
லய்யன்விஷ்ணு பிள்ளை யாய்ப்பிறந்தான் (45)

சத்திரியகுலத்தில் பிறந்தானே சங்கு
சக்கரபாணி யெனுந் தானே
யெத்தலத்தோர்க்கு மினி யிடுக்கமேது
யென்று மனதினி லெண்ணினனே (46)

திண்ணியமான பிலங்கொண்ட ராக்ஷதர்
செத்தார்கள் ராமன்கை யம்பாலே
யெண்ணியயெண்ணம்போல் தேவர்க ளெல்லா
மிடுக்கங்கள் தீர்ந்து யிருந்தாரே (47)

ஆதிமூலமான வாரணன் நாரண
னய்யன் சீதைக்கு யலங்காரன்
நீதியாய்ச்சத்திரிய குலத்தி லுதித்ததை
நேரி லறிந்ததைத் தானுணர்ந்தான் (48)

அரியுஞ்சிவனு மொருவ னல்லோசிவ
னாதிநாராயணன் தானு மல்லோ
யிருவர்வெவ்வேறென் றுலகத்தோ ரெண்ணின
தேழைமதி யென் றுணர்ந்தானே (49)

மதுரையில்பாண்டியன் றவத்தாலே யங்கு
வந்துபிறந்த மீனும்பி கையை
சதிராயசாக்ஷாத் கடவுள் சிவன்வந்து
சம்பிரமமாக மணம் புரிந்தார் (50)

கூண்டுக்குட்குஞ்சுக் கிரைகொடுக்கப் பட்சி
கூவியதுபசி தீர்ப்பது போல்
பாண்டியநாட்டினி லுள்ளோர்கள் யாவர்க்கும்
பஞ்சமாபாதகம் போக்க டித்தான் (51)

மண்ணிற்பிறண்டிடும் பிள்ளையை பார்த்தந்த
மாதாயெடுத்துக் கழுவிய போல்
எண்ணுங்கடவுளா மீசனும் பாண்டிய
னெல்லாப்பிணிகளும் போக் கடித்தான் (52)

காய்நிறமாறிக் கனியான தன்மைபோல்
காசினி யுள்ள சனங்களையும்
பேய்க்குணமாறிப் பெருமைக் குணம்வரப்
பெருங்கருணை செய் தானீஸ்பரனும் (53)

யிப்படியுள்ள கருணைக் கடவுளும்
யெங்கு மிவர்களுக் கெட்டாமல்
வொப்பனையான வுலகத்தி லெங்கணும்
வொளிந்ததை நாரதன் தானுணர்ந்தான் (54)

பார்த்தபலவித மார்க்கங்கள் தன்னிலே
பரமபதந் தருமீச னுண்டு
தீர்த்தனைக்கண்டு தெரிசிக்கப் பூமியில்
தெளிந்த வரில்லையெனத் தெரிந்தான் (55)

கண்டவதிசயந் தன்னையே நாரதன்
கருத்திலடக்கக் கூடா தெனவே
எண்டிசையான வுலகா வுலகத்தி
லெவ்விடம்போவோ மென் றெண்ணினனே (56)

எண்ணியவீணையை யிசை கூட்டிமுனி
யிந்த வுலகத்தை விட்டேகி
புண்ணியமான தவத்தோர் வசித்திடும்
பொன்னுலகந் தேடிப் போனனே (57)

போகுஞ்சமயத்தில் பூபதி யிந்திரன்
பூக்குமந்தார மர நிழலின்
தாகமதாய்யற மங்கையர் சாமரந்
தானசைத் தங்குமே நிற்கையிலே (58)

தங்கத்தினாற் செய்த ரத்ன சிம்மாசனந்
தானே றத்தையல்மார் தான் வாழ்த்த
எங்கே பார்த்திட்டாலுந் தேவர்கள்வந்து
யிருகைகள் கூப்பித் துதித்தார்கள் (59)

துதித்திடுந் தேவர்முகம் நோக்கிச் சுர
பூபதியப்போதுயே துரைப்பான்
கதித்திடும் வீணையைக் களிபெரமீட்டிடுங்
கானநாரதனைக் காணேமே (60)

எங்கே தான் சென்றாரோ நாரதமாமுனி
யேகிநாளாச்சுதே யென்னவென்று
பொங்கமானசபை தன்னிலே கேட்கயிற்
புகலுவார் தேவர் புரந்தரர்க்கே (61)

நாரதமாமுனி சென்றயிடங்களை
ராசனே நாங்க ளறியவில்லை
வராதுபோலவே யிப்போது வீணைதன்
வாத்தியச் சத்தங் கேட்குதென்றார் (62)

அந்தச் சமயத்தில் நாரதமாமுனி
யமர்ந்ததேவ சபைவந்தவனும்
கந்தர வீணையை மீட்டித் தேவேந்திரனைக்
கண்டுபுகழ்ந்து களிகூர்ந்தான் (63)

இந்திரன் மாமுனி தன்னையுங்கண்டு
மிசைந்திடு மாசனத்தே யிருத்தி
விந்தையாய்ப் பாடிடு நாரதரே நீர்
வெகுநாளா யேன் வரவில்லையென்றார் (64)

தேவர்க்கிசமானே தேவேந்திர பூமானே
செங்கோலைக் கையிற் செரித்தவனே
யவர்க்குமெட்டாத வய்யன் கயிலையில்
யெய்திப் பலதல மெய்தினனே (65)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
29 JUL 1911
MADRAS.

பூலோக மெத்தப் பிரளிகளாச்சுது
பொய்யது மெய்யின் றிரமாச்சு
சாலோகசாரூப சாயூச்சிய தேவனைச்
சற்றும் நினைக்காத பேராச்சு (66)

தருமங்குறைந்து தவங்கள் சிதைந்தது
தாறு மாறுனது சங்கடத்தால்
வர்மமானபிணி துன்பஞ் சடவுகள்
மாறவு மில்லையே வையகத்தில். (67)

இன்ன மநேக முனிவரரிந்ததை
யிந்திரன் சபையிலுரைத் திடவே
மன்னன் தேவேந்திரபூபதிக்குத் துயர்
வந்தது போலுமயங் கினனே. (68)

முதிர்ந்த தவத்திற்சிறந்த வுலகத்தார்
மோக்ஷ வுலக மடைந்தாலும்
அதிர்ந்தகழற் சிவன் தன்னையடைந்திட
வவ்வுலகந் தானடை யணுமே. (69)

பூலோகங்களது தானே யிந்தப்
பொன்னுலகங் களது தானே
மேலோருலகமது தானே சிவன்
மிக்க கயிலை யிருப்பதினுல் (70)

ஆயிரத் தெட்டுச் சிவதலமானது
வவ் வுலகத்தி லிருக்கிறதே
வேயிருந்தாதிய நாரண மூர்த்திக்கி
வேண தலங்களு மவ்வுலகே (71)

சீருஞ்சிரப்புந் திருவிழா மகிமையுந்
தேவர் குறைகளைத் தீர்ப்பதுவும்
யாருந்தவஞ்செய்து முற்றுப் பெருவது
மவ்வுலக மல்லா லெவ்வுலகம் (72)

திருநெடுமாலுஞ் சிவனும் பிறந்துமுன்
செழிப்பா யரசாண்ட தேசத்திலே
அருமறை வேதமுறைகளைச் சொல்லி
யந்தண ராற்றுன்ப நீங்கிடுமே (73)

வாருங்கள்தேவர் முனிவரென யிந்திரன்
மலரயன் தன்னிடம் போய்ச்சேர்ந்தான்
சாருஞ்சரணு கெதிய பயமென்று
ஸாஷ்டாங்க மாகத் தெண்டனிட்டான் (74)

வந்திடுமிந்திரன் தன்னை மலரயன்
வந்த செய்தியென்ன சொல்லுமென்றான்
மந்தாரமானிழற் சிம்மாசனத் தேறும்.
மன்னவ னிந்திரன் வரையலுற்றான் (75)

பூவுலகந்தனில் நாரத மாமுனி
போய்ப் பார்த்துவந்து புகன்றதையும்
யாவுந்தவறு மலிந்திரனய னுக்கு
நன்று யெடுத்து வுரைத்தானே (76)

உரைத்தவுடனேயே யுலகம் படைத்தவன்
வேரகேர மோசமுலகுக் கென்று
வரையின் சிறகையறுத்தவன் தன்னோடு
வைகுந்த லோக மடைந்தானே (77)

வைகுந்தந் தன்னிலே மாதவனைக்கண்டு
மாமலர் கொண்டு மலர்ப்பதத்தில்
செய்யுமுறை தவறுமற் சிதறியே
சிந்தனை யோடு துதித்தனரே (78)

துதித்து வணங்கிடுந் தூயபிரமனைத்
துளபமணி மார்பன் தான்பார்த்து
விதிக்குந் தொழிலுக்கிசைந்தவனே யிந்த
வேந்தனோடு வந்த காரணமேன் (79)

சீரதுவோங்கிச் செழித்திடு வையகஞ்
சிறந்திடு மாலையந் தெரிசனைக்கு
நாரதமாமுனி போயிச் சனங்கள்
நடக்கும் பிரமியைக் கண்டானே (80)

கண்டபிரமிக் கிக்காரண மானவர்
காசினி தன்னிலொரு வரில்லை
அண்டர்தொழுஞ் சிவன் சங்குசக்கரபாணி
யாதாரமான யிருவர் களே (81)

எந்தவுலகமு நீங்களல் லோவதில்
யிருக்குஞ் சீவசெந்து நீங்களல்லோ
சந்திர சூரிய நட்சேத்திரங்களும்
சத்த சமுத்திரம் நீங்களல்லோ (82)

அட்டதிசைகளு மட்ட கரிகளு
மட்டமலை யோடு மட்டவசு
திட்டமதான தோர் வேதமுதல்மற்றுஞ்
செப்பு மவர்களும் நீங்களல்லோ (83)

பூலோகந்தன்னிற் பிறந்த மனிதற்குப்
புத்திநலம் வரச் செய்துவைத்து
மாலேவுனது கிருபை செய்யவென்று
மலர யன்றானு வகுத்தானே (84)

வகுத்தபிரமனுரைத் திடுஞ் செய்தியை
மாலவன்றானு மனதி லெண்ணி
தொகுத்துரைத்த மொழி நிச்சயமாமிது
தோகைபாகற்கு வுரைப்போ மென்றான் (85)

ஈசற்குரைத்திட வாவென்ற யனையும்
 யெம்பெரு மாளுமெழுந் தேகி
மாசற்ற வெள்ளிமலையில் வசித்திடும்
 மங்கைபாகன் முன்னே வந்துநின்றார் (86)

கங்கையைப்பாதத்தில் வைத்தகடவுள்
 கருடனைவிட்டுடந் தானிறங்கி
மங்கை கயிடபாகம் வைத்தகடவுளை
 வந்ததுங்கண்டு மகிழ்ந்தாரே. (87)

மகிழ்ந்திடும்லெட்சிமி நாயகனப்போது
 மானைக்கரத்தில் வைத்தவனால்
புகழ்ந்துமடியார்களிட்டிடு மாசனம்
 போயமர்ந்தங்கு விருந்தானே (88)

அன்னத்தைவிட்டு யிரங்கிமலாய
 னனந்தமாகத் துதித்தேத்தி
நன்னயமானசிம்மாசனந் தன்னிலே
 நான்முகன்றானு மிருந்தானே (89)

இந்திரன்தன்னோடே வந்திடுந்தேவரும்
 யெல்லோருமீசனைத் தான்வணங்கி
சந்தோஷமாகவே யீசன்கயிலையை
 தான்வலஞ்சுற்றி வணங்கினரே (90)

வணங்கினதேவரு மீசன்சன்னதியில்
 வாய்பொத்திக் கைகட்டிநிற்கையிலே
மணங்கொண்டசோலைக் கயிலாயவானவன்
 மாயவனைப் பார்த்தேதுசொல்வான் (91)

சேஷசயனத்திற் பள்ளிகொண்டவனே
 திருமாலவனே கேசவனே
நேசமதாகவே நீர்வந்தகாரணம்
 நேரேயுரைத்திடு மென்றுரைத்தான் (92)

உரைசெய்யச்சொல்லவு முற்றதோர்நாரணன்
வுகந்துதிருவாய் மலர்ந்தருளி
இறையவனேபிறை சூடிடுமீசனே
யெல்லாமுனக்குத் தெரிந்ததுவே (93)

பூமியிலேபிணி சங்கடமாதுயர்
போகாத கஷ்டம் பொருந்தினதால்
சேமமிருந்திடச் செய்து மவர்கட்டுந்
தீராப்பிணியையுந் தீருமையா (94)

பிராமணர் செய்யுந் தவங்கள் மறந்ததைப்
பித்தனே நீரும் நினைக்கவேண்டாம்
பராபரனென்ற முறமை மறந்ததைப்
பாமனே நீரு நினைக்கவேண்டாம் (95)

இன்னும் பலவித சங்கடந்தானு
மிருக்கும் பலவிதம் வையகத்தில்
மன்னும் படிபிணி மாறுதிருக்கையில்
மனிதருலகில் மயங்கிடுவார் (96)

கோனே குணங்குடி கொண்டவனே யுயர்
குன்றை வில்லாக வளைத்தவனே
ஆனதினாலே சிவன்விஷ்ணு வாலய
மருளுமுண்டாக வரைந்திடுவீர் (97)

யோசனை நீ யொன்றும் பாருமல் மனம்
நொந்தமனு துயர்நோய் தீர்க்க
ஈசனே வேணுமே யித்தவரமென்று
யெம்பெருமாளு மிசைத்தானே (98)

நாரணனிவ் வரங்கேட்டிடவு மந்த
நமபன் சகாயன் ஜெகநாதன்
ஆரணமோது மனந்த கோபாலற்கு
அவ்வரந் தந்தோமென்றே யறைந்தான் (99)

மாமலராளையு மார்பிலணிந்திடும்
மாதவனே யருள் மாயவனே
கோமழுமான கயிலையில் மூவருங்
கூடினதே யிது நற்காலம் (100)

ஆனதினாலே யுலகத்தை ரட்சிக்க
வாகும் பிறப்பையுஞ் சொல்லுகிறேன்
தானநசரெனச் சாஸ்திரம் புகன்றிடுஞ்
க்ஷத்திரிய குலத்திற் பிறப்பேனே (101)

முன்னமுஞ் க்ஷத்திரிய குலத்திற்பிறந்துநாம்
மூன்றுல காண்டருள் செய்வதுபோல்
இன்னமுமந்தக் குலத்திற் பிறந்துபின்
யேவல்துயர் பிணி தீர்ப்பமென்றான் (102)

அத்தனறைந்த வுரை தனைக்கேட்டிடு
மாரணனுமரி நாரணனும்
சித்தமகிழ்ந்து நீசெப்புங் குலத்திலிற்
செய்யுந் தவத்திற் சிறந்தவனார் (103)

ஆரென்று கோட்டிடு மச்சுதனைப்பார்த்து
வைய்யனர வணி யானந்தனும்
பேரென்று கேட்டீரே நாரணரேவுருப்
பேருடனே நானுஞ் சொல்லுகிறேன் (104)

திருநெல்வேலியின் ஜில்லா வாமதைச்
சேர்ந்த ஸ்ரீவைகுந்தந் தாலுகாவில்
அருமையான சிருத்தண்டுக் கிராம
மதனையே சேர்ந்திடு மேறலநகர் (105)

யேறல்நகற் தனில் வாழுங்குடிகளுக்
கேற்றவுத் யோகங் கிராமுனிசு
பாரம்பரையாகப் பார்த்தரு ளுசலப்
பாலன் ராமசாமிப் பாண்டியனே (106)

ஈசன்மலரடி சிந்தனை யுள்ளவன்
யேற்றதரும் மிசைத் திடுவோன்
வாசமதான துளப மணிந்திடும்
வள்ளலை நித்தம் வழுத்திடுவோன். (107)

உத்தமமாகிய சத்ரிய குலத்துக்
குகந்த குணத்தி லுயர்வுடையோன்
பத்தன் ராமசாமி பாரிவயிற்றினிற்
பாலக னாகவே வந்துதிப்பேன் (108)

பிறக்குமிடந்தனைச் சொல்கிறே நாரண
பேர்பெரு மேறல் நகரம்விட்டுச்
சிரக்கும் புதுக்குடி தன்னி லிருக்கையிற்
செல்வனாய் வந்து பிறந்திடுவேன் (109)

என்றுமே மீச னுரைத்திடுஞ்செய்தி
யினிதாகக் கேட்டுமே யெல்லோரும்
நன்றென்று கேட்டிட்ட நாரணந்தன்னோடும்
நல்ல கயிலைவிட் டேகினரே (110)

பாண்டியநாட்டுச் சிறப்பு.

சேர்மக்கடவுள் பிறந்து வளர்ந்திடுஞ்
தேசச் செழிப்பினைச் செப்புகிறேன்
பார்தனிற் றேசத் தரசர்கள்வந்து
பகுதிதரும் பாண்டி நன்னாடு (111)

ஆதாரமான சிவனுஞ் சதாசிவ
னம்பிகை யாள்தன் னருளாலே
மாதமும்மாரி பொழிய விருக்ஷங்கள்
வானத் தளாவும் வளநாடு (112)

அருமையான் சிறுபெண்கள் கரும்பி
லலர்ந்து வெடித்திடு முத்தினத்தை
குருவமை மணலெனக் கூட்டியேயள்ளிக்
கொழித்து விளையாடும் நன்னாடு (113)

பூக்களின் றேனுங் கரும்புரசமும்
புனலிற் கலந்து புரண்டோடி
தாக்குங்குளங்கள் நிரப்பி மதகுகள்
தத்தளித் தோடிடு நன்னாடு (114)

நெல்லுமுளைத்து வளரும் பயிருக்கு
நேருங்களைகள் பிடுங்க வென்று
மெல்லிமுகத்துக் கிணையிடுந் தாமரை
வேரோடு தோண்டும் வளநாடு (115)

தாகந்தணிக்கும் புனலுக்குள் மேதிகள்
தாக்கியுளக்கவ ரா லெழும்பி
மேகத்தைமுட்டிக் கருவைக் கலக்கிப்பின்
விட்டதுளியோ டிரங்கு நாடு (116)

தானேயடர்ந்து தழைத்து வழந்திடுந்
தாமரைக்கூட்டத் துள்க்கு மேதி
ஏனுமிங்குவந் தோமென வெண்ணியே
யேங்கித்திரும்பி வரும் நாடு (117)

வாழைபலாவின் வருக்கைக் கனியோடு
மாங்கனிதானும் வறித்தி வந்து
ஏழைகள்பார்த்துக் கொடுப்போமென் றாலேழை
யெங்குங் கிடையாத நன்னாடு (118)

சோலைகள்வோங்கி வளர்ந்து செரிந்திடச்
சூரியன்போகும் வழி மரிக்க
சாலேயோன்பச்சைப் புரவிக ளேழையுங்
காலிடரச் செய்யும் நன்னாடு (119)

பஞ்சதருவினி லோர்தரு வாகிநற்
பாகாச்செய்ய ரசங்கள் தரும்
விஞ்சையர்போற்றும் விருச்ச மகிமையை
மேலோராற் சொல்லவுந் தானரிதே (120)

நகரச் சிறப்பு.

இத்தகையானதோர் பாண்டிநன் னாட்டிலே
யேறலெனுந் திரு மாநகரில்
சித்திரச்சாவடிக் குற்ற வலங்காரம்
செப்பவே யார்க்கு முடியாது (121)

வேதப்பிராமண ரோதிடுஞ் சாலையும்
விந்தையான யாக சாலைகளும்
பாதகத்தீவினை தீர்க்கு மடியார்கள்
பாடிப்படிக்கும் பதி மடமும் (122)

அன்னமிடுசத்ரம் வைத்து மடியார்க்கு
யன்பா யளிப்பது வோரிடமும்
நன்னயமாக நடக்கின்ற மேன்மையை
நம்மாலுஞ் சொல்ல முடியாதே (123)

அந்தணர்பூசிக்கு மாலயமு மவ
ரமர்ந்திருக்கு மக்ராறங்களுஞ்
சிந்தனையான தவஞ்செய்யுஞ் சாலையும்
செப்பவும் யாரால் முடியாதே (124)

சத்திரியரெனுஞ் சான்றோ ரவ்வூருக்குத்
தாய்தந்தை போலுந் தரமுடையோர்
எத்தினையோபே ரிருந்து வசிக்கின்ற
தினிமை யாகிய நன்னகரம் (125)

சத்திரமடாலயங் கட்டிவைத்து அன்ன
தானமுஞ்செய்து நலம் புரிவோர்
மித்திரரானவர் யெக்குல மானுலும்
மேன்மைப் படுத்திடுஞ் சான்றோரே (126)

தானதருமங்கள் செய்வாரே சிலர்
சைவ வைணவங் கொள்வாரே
வானோர்புகழ்ந்திடுஞ் சான்றோர் மகிமையை
வாயாலுஞ் சொல்ல முடியாதே (127)

இப்பெரும்பான்மைக் கிசைந்த குலத்திற்கு
யேற்றகுணங்க ளிறக்க முள்ளான்
செப்பருங்கிராம முனிசுவுத் தியோசனும்
தீரனருணா சலப் பேரான் (128)

பாரிலுயர்ந்திடுங் கீர்த்திப் புகழ்கொண்ட
பாக்கிய மெத்த சிலாக்கியவான்
சூரியகண்மணி யானவர் தங்களிற்
கொற்றவன் ராமசா மிக்குணவான் (129)

மூத்தகுமாரராய் வந்து பிறந்தானே
மூவுலகத்தோர் புகழ்ந் துரைக்க
சாத்மிகமான தவத்தோர் துதித்திடுந்
தக்கசிவன் விஷ்ணு வைத்துதிப்பான் (130)

பழமையானதோர் சாஸ்திரந் தன்னையும்
படித்துத் தேர்ந்து பழகினனே
அழகிற்சிறந்த ராமசாமி கல்விபோ
லாராலுங் கற்க முடியாதே (131)

நாலுவேதத்தின் முறையினிற் சொல்லிய
நாலெட்டுத் தருமம் நயத்துடனே
பாலுங்கொடுக்கும் பசுவன்ன வஸ்திரம்
பாக்கிய மேலுங் கொடுப்பானே (132)

ஏழைக்கிரங்கிடு ராமசாமி வள்ளல்
யேந்தலெனவே வளர் நாளில்
தாழை வளர்ந்திடுங் குட்டத்தூரம்மாளுந்
தனையனைக் கண்டு மகிழ்ந்தாளே (133)

பத்தாவருணாசலப் பாண்டியன் தன்னிடம்
பாலன் பவுசினைப் பார்த்தவளும்
எத்தால் நமக்குக் குறைவுமில்லை பால
னேற்றுஞ் சிவபத மென்றுரைத்தாள் (134)

உரைத்தவுடனே யருணா சலமென்னு
முத்தம பூபதி யப்போது
வரைத்தடமார்பு புழக முற்றுமன
மாதுடன்மெத்த மகிழ்ந் துரைப்பான் (135)

உத்தமமாகிய பத்தினியே கிளி
யோதும் வசனத்து மாதரசே
மத்தகம்போலுந் தனத்தாளே நம்
மகனுக்கு மாமணஞ் செய்யணுமே (136)

கண்டுகளித்துட னானந்தஞ் செய்கின்ற
கல்யாண மாகிய கண்காட்சி
எண்டிசை யோர்புகழ் ராமசாமிக்கிங்
கிணங்கும் பெண்ணெங்கே யிருக்குதென்றான் (137)

இணங்கும் பெண்ணெங்கே யிருக்கென்று கேட்டிடு
மேந்தலுக் கேயவ ளேதுசொல்வாள்
மணங்கொண்டவுமுரி நகரந்தனில் வாழும்
மன்னன்மகள் மணப் பெண்ணுமென்றாள் (138)

ஆண்டவனே யென்மே லன்புள்ளபத்தாவே
யாசைக் குகந்த மணவாளா
பூண்டதே யென்மனங் கன்னிப்பெண்களுடன்
பூவையும் நான்போகக் கண்டவுடன் (139)

மேகத்தைவிட்டு யிறங்கிய மின்னலும்
மெல்லிநல்லாள் வுரு வானதுவோ
பாகந்தருமிடை யில்லையோ வென்றுநான்
பார்த்து மயங்கினேன் பத்தாவே (140)

சித்திரமாகிய பல்லையு முத்தெனச்
செப்பிடுவார்கள் மிகத் தெளிந்தோர்
உத்தமிமாதவள் பல்லுக்கு முத்தையும்
வொப்பனச் சொல்ல முடியாதே (141)

கமுகுமரத்தினில் ரத்தினக் கயிற்றினாற்
கட்டிய ஊஞ்சல்மேற் கன்னியவள்
குமுகுமெனத்தாளத் தோடிருந் தாடயிற்
கூந்தலில் வண்டுங் குமுரினதே (142)

ஆற்றில்ஸ்தானஞ்செய்யப் போகையிலே பெண்க
ளங்கைபிடிக்க வடி பெயர்த்தாள்
தோற்றுமிவள்நடைக் கன்னங்கள் கண்டிதோ
தோற்றுவிட்டோ மென ஓடினதே (143)

தண்டைசதங்கையும் பாத சரங்களுந்
தார்குழல் தன்னிற் றணிமலரும்
அண்டத்துமாத ரிவளழகைக் கண்டு
வர்ற்றேமென் றெண்ணி யயர்வாரே (144)

பட்டுரவிக்கையு முத்தணிமாலையும்
பாங்கா யரையி லரைஞாணும்
திட்டமானகாதில்த் தோடுகளு மதின்
சிறப்பைச் சொல்ல முடியாதே (145)

புல்லாக்குமூக்குத்தி நத்துகளு மவள்
பொட்டிட்ட நெற்றிப் புருவங்களும்
எல்லாவலங்காரஞ் சொல்ல வேணுமானால்
யெண்ணி யென்னாலே முடியாதே (146)

கண்டிடும்பெண்ணினை யாரிவள் பேரெனக்
கண்டவொருத்தி யிடங் கேட்டேன்
விண்டுமெவள்பேர் சிவணணைந் தம்மாள்
மேலானநாடான் மகளு மென்றாள் (147)

அந்தவசனத்தைக் கேட்டவுட னரு
ணாசலவேந்தனு மேது சொல்வான்
சந்தோஷஞ்சந்தோஷம் மாதரசி நம்மள்
தனையனுக் கேற்றவள் தானவளே (148)

குமரியெழுந்து வெளியேறி யந்தக்
கோதையரைப் பெண்ணுங் கேள்ப்பதற்கு
உமறிநகரமே போய்ச்சேர்ந்து மவட்
குற்றதந்தை யிடந் தானுரைப்பான (149)

என்மகன் ருமசா மிக்குணவானுக்கு
யேற்ற கன்னிதானஞ் செய்வதற்கு
உன்மகளான சிவனணைந்தம்மாளை
வுற்றபெண் கேட்கவே வந்தேனென்றான் (150)

பெண்கேட்க வந்தேனெனச் சொல்லவேதந்தை
பேரா னந்தங்கள் மிகப்பெருகி
கண்ணுக்குள் மணியான சிவனணைந்தம்மாளைக்
கல்யாணப் பெண்ணாகத் தந்தேனென்றான் (151)

நல்லமுகூர்த்தமு நாளுமிட்டு மவன்
நட்சேத் திரங்களு தானமைத்து
வல்லவனு மருணாசல வேந்தனும்
வந்து மனவியிட முரைத்தான் (152)

பந்தலலங்காரஞ் செய்தார்கள் நல்ல
பாங்காக் கரும்பு கமுகுகளும்
சந்ததமாகிய மூங்கிலு வாழையும்
தானே யமைத்தாரே தோரணமும் (153)

மேழதாளங்களுந் தம்பட்ட மல்லாரி
வீணையுடன் பல வாத்தியமும்
வேழம்போல் வீறிடு மெக்காளவோசையும்
மேகத்தைப் போலு முழங்கினதே (154)

ஆபரண வகைசூடிக் கழுத்தி
லலங்கார மானதோர் மாலையுடன்
தாபரமாகிய சந்தனங் கஸ்தூரி
தானணிந் தார்கள் தலைவனுக்கே (155)

குங்குமப்பொட்டு தலப்பா சரிகையுங்
கூறியசோமனும் மேற்போட்டு
எங்கும்புகழ்பெரு ராமசாமி யெனும்
யேந்தலும் பல்லக்கி லேறினனே (156)

அண்டங்கிடுகிடு வென்ன வதிர்ந்திட
வாரபாரமான சத்தத் துடன்
வண்டணி பூங்குழற் சிவனணைந்தம்மாளை
மாலையிட மன்னன் வந்தானே (257)

பாதாதிகேசம் வரையினிற் பெண்ணுக்குப்
பாங்கா வணிமலர் மாலைகளுஞ்
சீதா திருமணக் கோலத் தலங்காரஞ்
செய்தது போலவே செய்தார்கள் (158)

கனங்குழை யென்னுஞ் சிவனணைந்தம்மாள்
கல்யாணம் பார்க்க வெகுஜனங்கள்
மனவிமக்களுடன் வந்த பவுசினை
வாயாலுஞ் சொல்ல முடியாதே (I59)

ஆசருமாமறை யந்தணர் போற்றிடு
மரசர்குருவாம் வசிஷ்டர் நிகர்
பாசூர்தன்னி லரசர் குருவும்
பண்பாய் மறையோரும் வந்தனரே (160)

வந்தகுலகுரு சாமியென்போ னவன்
மங்களமான மணத்தி னுக்கு
அந்தணர்கூட்டத் துடனிருந்து மகத்
தானசடங்கு மமைத் தானே (161)

மணவறைதன்னிலே மாப்பிளை தன்னையும்.
மங்கை சிவனணைந் தம்மாளையும்
இணங்கும்படிசெய்து தாலி கழுத்தினி
லிட்டானே வந்த மறையோரால் (162)

அந்தர துந்திமிதான் முழங்கத்தேவ
ரள்ளிமலர் களைத் தான்தூவ
சந்தோசமான ஜனங்களெவர் சட்குஞ்
சந்தனங் தாம்பூலங் தான்கொடுத்தார். (163)

மாப்பிளேபெண்ணும் மணவரை நீங்கியே
மன்னனருணு சலமுத லாக்
காப்பணிகையர் பெரியவர் தங்களைக்
கண்டு வணங்கி யிருந்தாரே. (164)

வந்தகுரு முதலந்தணர் தங்கட்கு
மற்றுமுள்ள யேழை யானவர்க்கும்
சிந்தைமகிழ்ந்திட வன்னதான முதற்
செய்யுந்தானங்களைத் தான் கொடுத்தான். (165)

பேரணியாகவே வந்த ஜனங்கட்கும்
பெண்டுபிள்ளை முதற்றன் கூட்டி
ஆரணமோதிடும் வேதியர் தம்மோடு
மவரவர் தம்பதி தானடைந்தார். (166)

கன்னல்கதலி கழனியிற் பாச்சிடுங்
கங்கை சிறந்தவுமுரி நகர்
மன்னனையே யருணுசல மன்னனும்
மைத்துன வாவென்று தானழைத்தே. (167)

எங்கள்பதியென்னு மேறல் நகருக்கு
யேகவே யெங்களுடன் கூட
மங்கை சிவனணைந்தம்மா ளையுமெந்தன்
மைந்தனையும் நீயனுப்பு மென்றாள். (168)

அந்தவுரைதனைக் கேட்டவுடனே யே
யாமென்று சொல்லியவன் தேவி
கந்தமலர்க் குழலாளை யழைத்தவன்
காரியமாக யெடுத் துரைப்பான். (169)

பத்தாவுமுரி நகரத்து மன்னனைப்
பாங்கான தேவியெடுத் துரைப்பாள்
அத்தஞ்சரி மகட்காகிடுஞ் சீதன
மன்பாக் கொடுத்து வனுப்புமென்றாள். (170)

நல்லதுயென்றுமே வுமுரிநகர் மன்னன்
ஞாயமாய்ச் சிவனணைந் தம்மாட்கு
வல்லபன்வுமுரி நகரத்து மன்னனும்
வரிசை பலவுங் கொடுத்தானே. (171)

கொடுத்த வரிசையைப் பெற்றவுடனந்தக்
கோதை சிவனணைந் தம்மாளை
எடுத்துவுச்சி மோந்து யேங்கிமயக்கமா
யேகம்மா யேறலுக் கென்றுரைத்தான். (172)

தாயுமகளும் மயங்கின ளேசின்னத்
தங்கச்சி தானுமயங்கினளே
சேயும்மயங்குந் திருமுகத்தைப் பார்த்துச்
சினேகிதத் தேவி மயங்கினளே. (173)

பன்முறை வேதம் படித்தருணசலப்
பாண்டியன் பாலகனை யழைத்து
தன்குலமாகிய சத்திரிய ரோடுந்
தானும் பல்லக்கினிற் போனானே. (174)

மணவாட்டியான சிவனணைந் தம்மாளும்
வர்னப் பல்லக்கிற் றானேறி
குணமான தாய்தந்தை தமயன்தம்பிவுயிர்
கூடப்போகுஞ் செயலாய்ப் போனாள். (175)

ஏறலெனுந் திருமாநகர் சேர்ந்தபின்
யின்பங்களோடு சில நாளும்
மாரனென்னுமெழில் ராமசாமி வள்ளல்
மங்கையா ளோடு சுகித்தானே. (176)

இந்தவிதமாய் மகிழ்ந்து சுகிக்கயி
லேந்த லருணாசலந் தானும்
சொந்தக் கிராமம்புதுக்குடி தன்னிலே
சுதனேநீ போயிச் சுகித்திருப்பாய். (177)

என்றுமே தந்தையுரைத்திட வாமென்
றிசைந்து ராமசாமி வேந்தனவன்
நன்றுசெழிக்கும் புதுக்குடி தன்னிலே
நங்கையுடனே போய்த் தானிருந்தான். (178)

வாரணிமாமணிச் சிவன ணைந்தானெனும்
மரகதரத்ன மணிவிழ க்கின்
காரணமாகத்தி ருவயிற்றிற் சிவன்
கருவினில் வந்து கலநதானே (179)

யீசன்கருவா யிருந்து வுருக்கொழ
யேந்திழையாள் தன்னிடை பெருக்க
பாசமான தனம்பற்று ரவுக்கையும்
பற்ருது யென்னப் பருத்ததுவே (180)

தளர்ந்துவயருங் கனத்துத் தரையினிற்
றள்ளாடித் தள்ளாடித் தானடக்க
இளந்திட்டு மேனிபசப் பாகிமிக்க
யிச்சையெது மேலு ண்டானதுவே (181)

நித்திரையும் வரவில்லே யென்பாளவள்
நிற்க்கயிருக்க முடியா தென்பாள்
பத்தியிருந்திடு மீரைந்து திங்களிற்
பாலனும் வந்து பிறந்தானே (182)

பிறந்தவுடனேயே மங்கையர் கூடிப்
பேசுங்குலவைகள் தானு மிட்டார்
சிறந்தமயக்கந் தெளிந்தவுடன் மங்கை
சிந்தைமகிழ்ச் சியுந் தானுனாள் (183)

பக்கத்திருக்திட்ட நங்கை யொருத்தி
பாவனை யாகவே தானோடி
தக்க ராமசாமித்தார் மன்னன் முன்னின்று
தங்கட்கு வாணும் பிறந்ததென்றாள் (184)

ஆண்பிள்ளையென்ற சொற்கேட்ட வுடனந்த
வாண்சிங்கமப் போதுயேது செய்தான்
மாண்மைபொருந்திடுஞ் சோதிடர் தன்னை
வரவழைத்து வுடனேது சொல்வான் (185)

பாலன்பிறந்தானே சோதிடரேநீங்கள்
பாங்காகக்கிரகந் தான்பார்த்து
சீலன்கிரகநிலையை யறிந்துநீர்
செப்பவும் வேணுமென்றேயுரைத்தான் (186)

செப்பவுவேணுமென்றே யுரைத்தவுடன்
சிற்பமறிந்திடுஞ் சோதிடரும்
அப்பவேகிரக புடத்தினையிட்டவ
ரன்பாகச்சாதகந் தான்வரைந்தார் (187)

எழுதிடுஞ்சாதக மேந்தல்ராமசாமி
யெண்ணிமனதிற் புகழ்வதற்கு
பழுதில்லாதபுகழ் கொண்டிடுஞ்சோதிடர்
பாலன்பலனை யுரைப்பாரே (188)

ஆயிரத்தைம்பத்தி யைந்தாமாண்டினி
லானதோராடியா மைந்ததிலே
சேயோன்பிறந்திடு நாழிகைநட்சேத்
திரங்களுஞ் செம்மையுமானதய்யா (189)

கிரகநிலையையறிந்து சொல்லமிக்க
கேசவனுந்தி மலர்மேவும்
பிரமனேவந்துவுரைக்க வேணுமதைப்
பேசமனுவால் முடியாதே (190)

எங்கட்குக்கிவன் பலன்சொல்லவேணுமென்று
யீரைந்துபேரு முணர்ந்தோமே
தங்கியவாருட சாஸ்திரந்தன்னிலுந்
தந்தையா மீசனெனவுரைக்கே (191)

தேவதேவனெனச் சொல்கிறதேசாஸ்திரஞ்
சிறந்தமனு வாவுந்தானுரைக்கே
யாவனிவனென்று சொல்கிறதுயெங்க
ளாய்ந்தவறிவுக்கு மெட்டலையே (192)

நாழிகைதானும் பிசகாச்சோயிந்த
லக்கினந் தானும்பிசகாச்சோ
வேளைகள்தானும் பிசகாச்சோயென்றால்
வேறேபலன்களு மொத்திலையே (193)

துண்ணிபமான வறிவோடுணர்ந்திடும்
நோன்மைப் பெருங்குணசாஸ்திரரும்
எண்ணுமிவனுக் கிருவத்தெட்டுதென்னி
லேற்றகண்டமென்றுந் தானுரைத்தார் (194)

ராசனைப்போ லுரைத்திடலாஞ்சுத்த
ஞானியைப்போலு முரைத்திடலாம்
ஈசனைப்போலு முரைத்திடலாம்மிக
யேகசராசர மென்றிடலாம் (195)

எங்களறிவினுக் கெட்டாதசாஸ்திர
மீசனிவெனனச் சொல்வதினல்
கங்கைச்சடையவன் தானிவனல்லாத
காரணம்வேறில்லையென் றுரைத்தார் (196)

சோதிடர்சொல்லிய வாயுரைகேட்டந்தச்
சுந்தரராமசாமிச சொகுசான்
மாதிப்பாகத்துள் வைத்தகடவுள்
மகிமையிதென்று வழுத்தினனே (197)

சாஸ்திரந்தன்னை யறிந்தேவுளாத்திட்ட
சாதுசதுர்மறை யந்தணர்க்குங்
கோத்திரமானோர் கொடுக்குமுறைப்படி
கோடிவரையுங் கொடுத்தானே (198)

அந்தச்சமயத்திலங்கே யொருமங்கை
யாண்டவனுஞ் சிசுவானவனை
தங்கத்தாம்பாளத்தில் வைத்துராமசாமி
தன்னிடம்வந்து முன்வைத்தாளே (199)

வைத்திட்டமைந்தன் முகந்தனைப் பார்த்துடன்
மற்றயவயவந் தான் பார்த்து
கைத்திட்டமாகவே சொற்னத்தினுற் செய்த
காப்பொன்று பாலற்கிடக் கொடுத்தான். (200)

கொடுத்திடுங் காப்பையுங் கோதையவள் வாங்கிக்
குழவிகரத்தி லணிந்த வுடன்
அடுத்திடுஞ்சோதிடர் தங்களை மன்னவன்
யாவதோர் நாமமறை வதென்றான். (201)

சோசிய ரவ்வுரை கேட்டவுடனந்தத்
தூயராமசாமித் தோன்ற லுக்கு
பேசுஞ்சிவனிவ னுனதிரு விசைப்
பேருநீ சொல்வது கேளுமென்றார் (202)

கந்தமலற்குழற் பாகற்கொரு பெயர்
காரண னுமருண சலனே
அந்தப்பெயரிவர்க் காமெனத் தந்தை
யருணசல மென்றறைந் தனனே (203)

அருணசலமென் றறைந்திடு மன்னவ
னங்கொரு மங்கை நின்றானவளைக்
கருணகரனென்ற கண்மணியை நீயுங்
கனங்குளைபாலுங் கொண்டேகு மென்றான் (204)

மாதாசிவனணைந்தம் மாளிருக்கின்ற
மாடத்தில் மங்கை யானவளுந்
தாதாவெனுஞ் சிறுபாலகன் றன்னையே
தார்குழலியிடந் தான் கொடுத்தாள் (205)

சுந்தரமாகிய ராமசாமி யெனுந்
தோன்றலுஞ் சோதிடர் தான்சேர்ந்து
மந்தரம்போலும் புயத்துடை யவுந்தன்
மாமன்றிருப் பேரும் வைத்தாரென்றாள் (206)

சிந்தைமசிழ்ந்து சிவனணைந் தம்மாளுந்
தீரன்மாமன் பேருஞ் செப்பினதால்
விந்தையிது வெனச்சந்தோச மாகி
விரும்பிப் புதல்வனைத் தான்வளர்த்தாள். (207)

பாலனைத் தொட்டிலிலிட்டாளே யவள்
பாங்கான தாலாட்டுச் சொன்னாளே
சீலனைக் கண்ட சிவனணைந்தம்மாட்கு
திரேகமும் பூரித்துத் தானிருந்தாள். (208)

சந்ததமாகிய ராமசாமி மன்னன்
சர்க்கரை சீனிகற் கண்டுடனே
கந்தமலர்களும் வந்த ஜனத்துக்குக்
கையாலே யள்ளிக் கொடுத்தானே (209)

யெல்லோரும் வாங்கி யருந்தினரே யந்த
யேந்தல் ராமசாமி தன்னிடத்தில்
வல்லாரெனச்சொன்ன சோதிடரும் யிரு
வாரோமென்று சொல்லிப் போனாரே (210)

மன்னவர் போற்றிடு ராமசாமியெனும்
வள்ளலுமப் போதேது செய்தான்.
பன்னருந்தங்கப்பணி செய்யுஞ் சிற்பனைப்
பாங்குட னங்கே வரவழைத்தே (211)

எந்தன் குழந்தை யருணாசலமெனு
மேந்தலான சிறு பாலகற்கு
விந்தையானநகை செய்துவரச் சொல்லி
வேண்டுந் திரவியந் தான்கொடுத்தான். [212)

தொந்தமான நகைசெய்து வாசாரியுந்
தூய ராமசாமி தன்னிடத்தில்
பந்தமரும் பாலன்றன்னை யெடுத்துமே
பரிவுடனிங்கே வரட்டுமென்றான். (213)

ஓடியெடுத்துமே தாதியரெல்லோரு
முற்றசிவனனைந்தம்மாளுடன்
நாடியவர்களிருக்கு மிடத்தினில்
நங்கைதன்னையன்னைக் காட்டினளே (214)

தண்டைச்சுதங்கையுங் காப்புமணிந்தானே
தங்கக்கொலுசு மணிந்தானே
சுண்டுவிரலிலே மோதிரமுமிட்டு
துலங்குமரைஞா ணணிந்தானே (215)

கால்விரல்தன்னில் மிஞ்சியணிந்தானே
காதிற்றரிப்புந் தானணிந்தான்
மேலுஞ்சரப்பளி ரத்னப்பதக்கமும்
விதானமாய்ப் பூநூலணிந்தானே (216)

நவரத்னத்தாலே யணியலங்காரித்த
நாயகனுஞ் சிசுவானவனை
தவஞ்செய்தோர்கண்ணினுல்க் கண்டவரேயல்லாற்
றரணிதன்னிலே யார்களடி (217)

அப்பன்செகதீச னய்யன்பராபரன்
னனந்தனே சிசுவானவனை
செப்பியதந்தையாம் ராமசாமிவள்ளல்
சேர்த்தணைத்து முத்தஞ்செய்தானே (218

இப்படியாக வளர்த்திடுமன்னவ
னீன்றவருணாசலச் சிசுவும்
குப்புறவிளுவதைக் கண்டுசந்தோசமாய்க்
கூவியுரைப்பான் மனைவியிடம் (219)

தவழ்ந்துயெழுந்து நடந்துதெருவினித்
றன்போய்த்திரிவதைத் தான்பார்த்தான்
குவிழ்ந்ததனத்துச் சிவணைந்தம்மாளைக்
கூவிமகிழ்ச்சி யுடனுரைப்பான் (220)

ஓடியேபோயித் திரிந்து விளையாடி
யுற்ற துணையாஞ்சி சுக்களுடன்
ஆடியே வந்துடனய்யா வம்மாவென
வப்பனே வாவென் றெடுத்தணைப்பான். (221)

கொஞ்சுங் கிளிமொழி சிவணைந்தம்மாள்தன்
கொங்கைப்பால் தன்னை மறந்தவனும்
விஞ்சியபாலுமே யன்னங் கற்கண்டுடன்
வேணு கனியும் புசித்தானே. (222)

நைந்த யிடையாள் சிவணைந்தம்மாளும்
நாதன் ராமசாமிப் பாண்டியனும்
ஐந்துவயது மகனுக்கு வந்ததென்
றானந்தமான மகிழ்வு கொண்டார். (223)

வெள்ளிக்கிழமையில் நல்ல முகூர்த்தத்தில்
மேலான வாத்தியார் வேதியனும்
பள்ளிக்கூடத்திலழைத்து வந்து யிந்தப்
பாலற்கறியப் பகர்ந்தானே (224)

வாத்தியார் சொல்லிக்கொடுத்த க்ஷரத்தையும்
வரதன்ருணா சல வேலனும்
சூத்திரமான பலகலை சாஸ்திரஞ்
சொல்லிக்கொடுக்கு முன் கற்றானே (225)

14479
O-,85MSK4,E
N11

நாலுவேத மாறுசாஸ்திரந் தன்னையும்
நன்றாய்ப் படித்துத் தெளிந்தவனும்
வேலுமயிலவன் வோதிய ஞானமும்
மெய்யாய்ப் படித்துத் தெளிந்தானே (226)

அருபத்துநாலு கலக்கியான மதுக்
கான தொண்ணூற்றாறு தத்துவமும்
விருப்பத்தினாலேயே சொல்லிவைக்கு மாசான்
வேருமிவனிடங் கற்க லாமே (227)

தற்பரனான சிவனருணா சலந்
தனக்கு வயது யிருபதுக்குள்
அற்புதமான சிவனணைந்தாள் வயிற்
றுமொன்று பெண்ரெண்டு மானதுவே (228)

தந்தையுந் தாயுடன் தம்பிதங்கச்சிமார்
தானுஞ் சிறப்போடி ருக்கையிலே
சிந்தை மகிழ்ந்த சிவனணைந்தம்மாளுஞ்
செப்புஞ் சிவபதஞ் சென்றாளே. (229)

செத்திடுந்தயார் சிவனணைந் தம்மாள்க்குச்
செகதீசனா மருணா சலமும்
கத்தி யழுதானுலக பிதாவெனுங்
காரண மானதோ ராரணனும் (230)

உத்தமியேதாயே யுச்சியை மோந்தென்னை
யுகந்தொரு முத்த மிடுவாயே
செத்தாயே மாதாவயிற்றினிற் பத்துத்
திங்கள் சுமந்தாயே வென்றழுதான். (231)

என்னைத்தெருவினில் விட்டாயே தாயே
யென்முகம் பார்த்தன்னம் யார்கொடுப்பார்
அன்னையேயென்று யழுதானே வுலகுக்
கன்னங் கொடுத்திடு மப்பனுமே (232)

கோவென்ற ருணாசலமுதலோன் மிகக்
கூவி யலறியே கூச்சலிட்டான்
ஓவென்றலறி யழுதாரே தந்தை
யுற்ற தங்கைமாருந் தம்பியுமே (233)

இறந்த சிவனணைந்தம்மாள் தனக்குமே
யீமக்கிரிகைக் கிசைந்த தெல்லாம்
துறந்தபெரியோ ருரைத்த மொழிப்படி
தோன்ற லருணாசல முடித்தார் (234)

ஏறலூருக்குப்போய்ச்சேர்ந்தது.

இந்த விதமாயிருக்குஞ் சமயத்தி
லேந்தல் ராமசாமி யானவனை
விந்தையதாகவே யின்றருணாசல
வேந்தனு மப்போது விண்டுரைப்பான் (235)

இந்தப் புதுக்குடி தன்னிலிருந்திட
யேலா தெனவே யெடுத்தோதி
சந்ததமாகிய யேறல் நகருக்குத்
தாங்களும் வாவெனப் போனாரே (236)

ஏறல் நகரிலிருக்குஞ் சமயத்தி
லேந்தல் ராமசாமி யானவனும்
பாரம்பறையாய்க் கிராமுனிசுத்தி யோகம்
பாலகா பாரெனத் தானுரைத்தான். (237)

சொந்தக்கிராம முனிசு யுத்யோகத்தை
தோன்ற லருணாசலம் பார்க்கையில்
சந்ததமாய்த்தந்தை யே யருணாசலச்
சான்றோன் சிவபதம் தானடைந்தான் (238)

சரியாய்ராமசாமி தந்தை சடங்கினைத்
தானுந் தவராம லேமுடித்து
உரியமகனுங் கிராம முனிசோடு
வுற்ற துணையாகத் தானிருந்தான் (239)

வில்லேஜ்மேஸ்திரட் டானவுத் யோகத்தில்
மேலான பொய்யை விளம்பவென்று
அவலற்படுந்துய ராகுதே யென்று
ஆகாவேண்டாமென்று தள்ளி விட்டான் (240)

இங்கிலீசி முதலான தெலுங்கொடு
யேற்ற கிர்வாணந் துலுக்குடனே
தங்குங்கிரந்த சுலோகங்கள் தன்னையுந்
தானேகன்னடந் தான் படித்தான் (241)

அன்பத்தோரக்ஷரந் தன்னைப் படித்ததி
லடக்கப் பொருளையுந் தானறிந்து
இன்பத்துடையவன் கற்றிடு மந்திரம்
யெண்ணி யென்னுலு முடியாதே (242)

சற்பங்கடித்த சனங்களைக் கண்ணின்
சபிக்கினையாகவே தான் பார்த்து
அற்புதமாகிய மந்திரத்தைச் சொல்லி
யப்போ விஷத்தை யிறைக்கிடுவான் (243)

ஆடுமாடுபல வெந்தச் செந்தானுலு
மதற்கு விஷத்தை யிறைக்கிடுவான்
கூடும்வியாதிக ளானு லவிட்டதங்
கொடுத்தவுடனேயே வோடிடுமே (244)

உலகங்களிலுள்ள சங்கடந் துன்ப
முயர்ந்தவியாதி யுடைப வர்க்கும்
இலகுதவத்திற் பிறந்தரு ளுசல
யேந்த லிவனு மருந்தாமே (245)

கண்டுபுகழ்ந்து களித்தானந் தங்கொண்ட
கற்றறி வான பெரியோரும்
மண்டுசபைகூடிக் கலெகட்ட துரைச்குமே
மனுவொன் றெழுதி யனுப்பினரே (246)

மனுவிலெழுதிய வக்கணை தன்னையும்
 மனுநீதி செங்கோல் நடத்திவரும்
இனிமையான கலெக்கட்டரு மப்போது
 யிசைந்த மனுவையும் பார்த்தாரே (247)

ஏறல்நகரி லிசைந்த குடிகளு
 மேற்ற கிராமத் தனைவோருமே
பாரம்பரை பார்த்தராமசாமிப்
 பாலன்வேண்டா மென்று னென்பதையும் (248)

பொய் சொல்லாவாசக னிவனென வென்றதும்
 புத்தியில் மேலவ னென்றதையும்
தெய்வம்போல்வந்து பிறந்தானிவன் மகா
 தீரன்று னென்றதும் பார்த்தானே (249)

ஞாயத்தலத்துக் கிசைந்தவனே நல்ல
 ஞாயமுறைக் கயிவந் தானே
நேயத்தினுலுங் குணத்தினு லுமார்க்கும்
 நேர்மைய னென்றதும் பார்த்தானே. (250

நல்லவனு மருணசல் மெங்கட்கு
 ராசனிவனெனப் போலுரைப் போம்
ஒல்லையிற்றலத்திலுத் யோகம் வேணுமென்
 றேதும் யெழுத்தையும் பார்த்தானே (251)

இப்படியுள்ள வனிருக்கிறனே வந்த
 யேறல் நகர் தனிலென்றுணர்ந்து
ஒப்பிடுஞ் சேர்மவுத் யோகமிவனுக்கு
 வுத்தரவு தந்தே னென்றுரைத்தான் (252)

சேர்ம வேலைதானும் வந்தவுடனேயுஞ்
 சேர்மனெனப் பெய ருண்டாச்சு
பாரிலிருக்குஞ் சனங்கள் சந்தோஷத்தைப்
 பகர்ந்து சொல்ல முடியாதே (253)

நல்லகுதிரையிற் சீனிவைத்துச் சற்றே
லயன் சவ்வாரி நடத்திடுவான்
வல்லவனுகிய சேர்மன் வாருனென்று
வல்லவட்டையு மெடுப் பாரே (254)

அங்கராச் சட்டைகள்போடுவானுந் தலைக்
கழகு தலைப்பா வணிவானும்
தங்கிடுஞ்சூரியன் மூன்றெனச் சொல்லவே
தரிப்புக் காதிலணி வானே. (255)

பிர்மசத்திரியர் வைசியர் சூத்திரர்
பேரான சாதி நாலுடனே
தரமானசாதிய ரெத்தனையோ சேர்மன்
தன்னைப் புகழ்வாரனு தினமே (226)

வீட்டைவிட்டு வெளியேறி வருகையில்
மெல்லி நல்லார் களெதிரில்வர
தாட்டீகமானேன் தலையைக் கவிழ்ந்துமே
தரைதனைப் பார்த்து நடந்திடுவான் • (257)

தையலர் சேர்மனைத் தழுவநினைத்தவர்
தானே யெண்ணியெண்ணித் தானுருகி
மய்யலுங்கொண்டு திரியுஞ் ஜனங்களை
வாயா லுரைக்க முடியாதே (258

சேர்மவேலையதி காரத்தி லிருந்து
தேச விசாரணை செய்யயிலே
வீர்மையானதோர் பாம்பு கடித்தது
விஷத்தை விலக்குமென்றே வருவார் (259)

மாடாடுகொண்டு வருவாரம் விஷம்
வாங்கய்யா வென்று வருவாரும்
ஈடாடுந்துன்பமு மெங்களை நீங்கலை
யென்ன செய்வேனய்யா வென்பாரே (260)

சற்காருவேலேயும் பாற்கவும் வேணுமே
சனத் துபகாரஞ் செய்யணுமே
பற்பலசோலிக்குப் பங்கம்வராமலே
பாதுகார்க்கும் வித மெண்ணினனே (261)

குத்துக்கல்லொன்று நட்டவுஞ் சொல்லியே
கூர்மையான மந்திரந் தான்செபித்து
கத்துமிருகஞ் சனங்களேப் பாம்புகள்
கடித்திடச் சுற்றவுந் தீருமென்றே (262)

செய்யுமுறைப்படி சாமான்கள் சேகரஞ்
செய்யவேணுமென்று மனதி லெண்ணி
அய்யன்ஜெதீச னப்பனேச் சிந்தித்து
வன்று யிரவிற் றுயின்றனே (263)

செகதீசன் சேர்மனுக்கு கனவுரைத்தல்.

சேர்மனிவனித்திரை செய்யபி லேசெக
தீசனொரு சித்த னகவந்து
ஆருனக்கீதைச் சொன்ன மதியிது
வந்தவேலேயிப்போ வாகா தென்றுன் (264)

நாலுயேழுவய சுனக்கு நடக்கையில்
நம்பனே சேற்ம நாயகனே
மேலுநீயென்னிடம் வந்ததின் பின்னலே
வேண்டிய விந்தைகள் செய்திடலாம் (265)

என்றுமேயீசனுஞ் சொற்பனந் தன்னிலே
யிந்தவுரை மட்டுந் தானுரைத்து
ஒன்றுமேபேசாமற் சேர்மனே விட்டு
வுடனே சென்றூர் கயிலாயம் (266)

சித்தனும்போயிடச் சேர்மனு மப்போது
திடீரென் றலறியே தானெழுந்து
முத்தனும்வந்து கனவி லுரைத்தது
மோசம் நமக்கென்று தானினைத்தான் (267)

இருபத்திரெண்டுநாள்த் தானே யிருக்கிறு
யிருபத்தி யேழு முடிவதற்கு
வருஞ்சித்தன்சொன்ன வயசிரு பத்தெட்டு
வந்ததே யென்று மயங்கினனே (268)

விதியின்பயனே நடக்குமென்று கற்ற
மேலோ ருரைத்த விதம்போலே
மதியிலுயர்ந்தரு ஞசலச் சேர்மனும்
வந்தால் வரட்டுமென் றேயிருந்தான் (269)

மாமியாள் வொருவனையனுத்து யேறலுக்குச் சேர்பனிடமனுப்புதல்.

யிப்படியாக யிருக்குஞ் சமபத்தி
லேந்தலாந் தந்தைக் கிளையவளும்
ஒப்பிடுவார்த்தை வுரைக்கு வொருவனு
முற்றவனோடு வுரைக்க லுற்றுள் (270)

ஏறல்நகருக்கு நீபோ யண்ணு
யீன்றிடுஞ் சேர்ம யிசமானிடம்
தாரணியோர்கள் வணங்குங் காயாம்புளி
சமீந்தாரான உன் மாமனுமே (271)

முன்னையுங்காயாம் புளிக்குமே தன்னை
முசாரி வரச்சொல்ல வாருததால்
என்னையனுப்பினு ரிங்கேவந்தே னய்யா
யென்றுபணிந்து யிசைப்ப திதே (272)

மாமனுர்தன்னிடம் மாமி யுரைத்தது
மணஞ்செய் பருவம் மகள்தனக்குச்
சேமமாய்வந்தது சேர்ம னிடத்திலே
செப்பவோ ருள்விடச் சொன்னுளே (273)

சொன்னவுடனந்தத் தூய சமீந்தாரும்
தோகையவளையுந் தானும் வைத்து
நன்னயமாயந்தச் சேர்ம னிடத்திலே
ஞாயங்கள் சொல்லெனத் தானுரைத்தான் (274)

ஆயிரம் பொன்னுக்குவா பரணங்களு
மய்யாயிரம் பொன்னு ரொக்கமுடன்
வேயிருந்தோங் கிடுஞ்சோலைகளு மிக்க
மேலான மாமர மெண்ணூரே. (275)

தென்னமரத்தினி லாயிரமு மதைச்
சேர்ந்தகமுகி லெழு நூறும்
அன்னமிருந்து விளையாடுங் கழனியி
லம்பது கோட்டை விரைப்பாடே. (276)

உப்புவிளைந்திடும் ப்ரத்தியில் நானூறு
வுகந்துமகளை மணம் புரிந்தால்
செப்பியதுபோலே தாரேனென்று ரென்று
சேர்மற்குச் சொல்லென்ற னுப்பினளே. (577)

காயாம்புளிதனை விட்டுமே தூதனுங்
கடுகி நடந்துடனேறல் வந்து
ஆயுந்திரத்தவன் சேர்மன் முன்னேயத்தை
யன்பன் சொன்னரென்றதை யுரைத்தான். (278)

வந்துசொன்னதூதன் வாய்மொழி கேட்டுடன்
வள்ளலாஞ் சேர்மன் மகிழ்ச்சியதாய்
தந்தான வார்த்தையுந் தூதனிடத்திலே
தானேயுரைக்க வுணர்ந்தானே. (279)

கண்டகனவுக்கு நிச்சயமாக வே
கண்டமும் வந்து முடிவோமென்று
உண்டான காரியஞ் சொல்லக்கூடாதென்றே
யொழித்து வொருவாக் குரைக்கலுற்றான். (280)

சில்லாக்கலைத்துட்டர் சேர்ந்த மீட்டிங்கிக்கிச்
சேர்ந்து நடத்த யெனக்குரைத்து
யெல்லார் புகழ்ந்திடுஞ் சீர்மைக்குப்பெட்டிச
னெழுதி யிருந்தது வந்திடுமே. (281)

வந்தவுடனந்த மெம்பரு நாணுகி
மங்கை மணத்தை நடத்திடுவோம்
சந்தோசமாகவே போவென்ற னுப்பிடத்
தானே தூதனும்போ யுரைத்தான் (282)

சேர்மக்கடவுள் சிவபதஞ்சேர்தல்.

ஆயிரத்தெண்பத்து மூன்று மாண்டினி
லானதோர் கிலக வருடமதில்
தேயுருமாடியிற் றிங்கட் கிழமையிற்
சேர்ந்தவம் மாவாசை வந்ததுவே. (283)

தேதிபதினாறு தன்னிலே சேர்மனுஞ்
சென்று தன்பஞ்சணை மீதிருக்க
ஆதிபிரம னமைத்த விதிப்படி
யாயாச்சம் வந்து வயர்ந்தானே. (284)

மெத்தமயக்கமே யுண்டாச்சு வப்போ
வேறொன்று யாவர்க்குஞ் சொல்லாமல்
பெத்தநந்தை ராமசாமி யிடத்திலே
பிழைக்கமாட்டேனய்யா வென்றுரைத்தான். (285)

செத்திடுவேனென்று சேர்மனுஞ் சொல்லவுஞ்
சீமான் ராமசாமி யானவனும்
சுத்திப்புரண்டு வழுதது யரிணைக்
கண்கொண்டு பார்க்க முடியாதே (286)

தந்தையெனும்புகள் கொண்டிடு ராம
சாமியைப் பார்த்தருணு சலமும்
சந்தனவாசங் கமழுந்தாம் பிரநதி
தன்னிற் சமாதிக்கிடமு மதே (287)

போட்டிடுஞ் சாம்பிராணி வாடைகமழ்ந்திடப்
பொங்கமான சாஸ்திர யேடும்வைத்து
வாட்டமில்லாமலர் மாலே மணத்துடன்
வாழுஞ் சமாதி வகுத்திடென்றான் (288)

இந்தவுரையை யிசைசத்தருணை சல
யீசன் யென்னப்பன் செகதீசன்
பந்தமதான வரிவை நிருத்திப்
பரம பதத்துக் காளாகினனே (289)

ஆரணமோதிய நான்முக னிந்திர
ரண்டர்களெட்டுத் திசை யோரும்
நாரணனாதி யுருத்திரர் தும்புரு
நாரதனோடுமே வந் தாரே (290)

சேர்மனெனப் பெயர்கொண்ட ருணாசல
தேசிகனுஞ் செகதீச னையும்
பார்தனிற் பொற்ப விமானத்திலேற்றிப்
பரமபதத்தி லிருத்தி னரே (291)

வரதனுஞ்சேரு மனன ருணாசலம்
வய்யத்தை விட்டுவான் சென்றவுடன்
சுரதமணியே வுலகோ ரழுதிடுந்
துயரினைச் சொல்கிறேன் கேளடிநீ (292)

தந்தை முதற் சனங்களழுதமை கூறல்.

சேர்மனுயிரு முடிந்த வுடனேயே
சீரான தந்தையா மன்னவனும்
பார்மீதில் மோதியடித்து விழுந்துயென்
பாலகா யென்றும மழுதானே (293)

முட் டியழுதானே மகனே பாலாவென்று
மூச்சற்றவன் போலுந்தான் கிடந்து
கிட்டியே சேர்மனைத்தான் கட்டிச்சேர்த்துடன்
கீழே விழுந்து மழுதானே (294)

உன்தாயிரந்திடக் கல்யாண வேண்டாமென்
றுன்னைத் துணையாக நானிருந்தேன்
அன்பான யென்மகனெங்கே யெங்கேயென்று
ஆகமுகத்தி லறைந்தழு தான் (295)

உத்யோகத்தாருக்கு யென்ன சொல்வேனடா
வொளியுள்ள ரத்னத்தனி விளக்கே
செத்தாயோ நானினியெங்கே காண்பேனடா
சீமானே யென்று புரண்டழு தான் (296)

கல்விக்கிநீயே களஞ்சியமே யடா
கற்றறிவோர்க்கு நீ ஞானமடா
செல்வனே தேசிற்சிறந்தவனே யடா
சித்திரக் கய்யனே யென்றழுதான் (297)

நானே வுனக்கு முன் சாகவேண்டுமப்பா
நற்கடனெனக்கு நீ செய்யவேண்டும்
ஏனேயெனக்கு முன்செத்தாயடா பாலா
யென்னைமோசஞ்செய்தா யென்றழுதான் (298)

தம்பிக்கி நீ யென்னசொன்னையடா மகனே
தங்கச்சிமாருக்குயே துரைத்தாய்
நம்பியிருந்தோ மேயெல்லோரு முன்னே
நட்டாத்தில் விட்டாயேயென்ற ழுதான் (299)

வாயிலடித்துமே தானழுதானவன்
வந்தசனத்தையும் பார்த்தழுதான்
காயுமெறியில் விளுந்த மெளுகைப்போல்
கதரியழுதானே தந்தையுமே (300)

இந்த விதமாகத்தந்தை ராமசாமி
யேங்கிமிகவே யழுகையிலே
சுந்தரமாகிய தம்பி தங்கச்சிமார்
துள்ளிவிழுந்து புரண்டழுதார் (301)

சின்னையாமாருடனே யவர்மக்களுந்
சேர்மனைக்கட்டிப்புரண்ட ழுதார்
நன்னயமான சிரியதாய் மார்களும்
ஞானவா சேர்மனே யென்றழுதார் (302)

உற்றசனங்களும் பந்துவர்க்கங்களும்
வுரவின் முறையாருந்தான மூதார்
மற்றநகரிலுள்ளோர்களழுததை
வாக்காலுஞ் சொல்லமுடியாதே (303)

மன்னவர் போற்றிடுங்காயாம்புளிகர்
வள்ளல் சமிந்தாராதித்தனும்
என்னநினைத்திட யென்னநடந்தது
யென்றுமேவந்து வழுதானே (304)

தாம்பிரநதிக்கரையிற் சமாதிவைத்தல்.

மாமியுவந்துவழுத விதந்தனை
வாயாலுஞ்சொல்ல முடியாதே
ஏமினித்நாமித மென்னென்றுசேர்மனை
யியல்பாகஸ்தானஞ் செய்துவைத்தார் (305)

சந்தனங்கழபம் புனுகுதடவிமேற்
சாக்கட்டுபட்டு னூற்றுணணிந்து
சொந்தநகைகளைத் தந்தைகொடுத்திடத்
தோழராழுது மணிந்தாரே (306)

பிச்சிமலர்மாலை தானணிந்துமிகப்
பேரானகல்யாண மாப்பிளைபோல்
மெச்சிடுஞ்சேர்மெ னிருந்தவழகினை
விந்தையுரைக்க முடியாதே (307)

பூந்தேருச்சப்பரந் தன்னிலேசேர்மனை
பொங்கமுடன் தூக்கிப்போகையிலே
தேந்தோர்தெருவிற் புரண்டழுஞ்செய்கையை
தேவராலுஞ் சொல்லத்தானரிதே (308)

கூட்டங்கூட்டமாக கூடியழுவதைக்
குறித்தென்னால் சொல்லமுடியாதே
தாட்டீகமான யெழவட்டங்களெல்லாந்
தரையிலேமுட்டிப் புரண்டழுதார் (309)

கர்னனேயென்று மழுவாருஞ்சிலர்
காமனேயென்று மழுவாரும்
தர்மனேயென்று மழுவாருஞ்சிலர்
தாவிவிழுந்து புரண்டழுதார் (310)

மணக்கோலம்பார்க்கவே காண்பிப்பாயென்று
மகிழ்ச்சியாயெல்லோருந் தானிருக்க
பிணக்கோலங்காண்பித்துப் பேசாமற்போராயே
பெருமையோ சேர்மனேயென்றழுதார் (311)

மண்டானகூட்டத்தைப் பார்க்கவந்தசனம்
வாயிலடித்து வழுதாக்கால்
பெண்டுகள்கூடி யழுததுயரிணைப்
பேசயென்னாலு முடியாதே (312)

இந்தவிதமா யழுதசனங்களை
யென்னாலுரைக்க முடியாதே
தந்தந்தலையிலடித் தழுதசனந்
தாம்பிரநதிக்கரை சேர்ந்தாரே (313)

ஆற்றுக்கரையினிற் சேர்மத்துரையையு
மாலமரத்தடி தானிறக்கி
நாற்றிசைகிறீக்குழி தோண்டிச்சேர்மனை
நல்லதோராசன மிட்டிருத்தி (314)

போட்டிட்டரத்தின ஆபரணமுதற்
பொங்கமானமலர் மாலையுடன்
தாட்டீகமானநற் சேர்மன்படித்திட்ட
சாஸ்திரயேட்டையுங் கூடவைத்தே (315)

மண்ணையும்போட்டு மூடினரேசேர்ம
வள்ளல்சமாதி வகுத்தாரே
எண்ணுங்கடவுளா யிங்கேயிருந்துநீ
யெங்களைரட்சி யென்றேகினரே (316)

ஆற்றிலிறங்கி முழுகினரேசன
மவரவர்வீட்டுக் கேகினரே
தோற்றுங்கடவுளிங்கே வருஞ்செய்கையைச்
சுரதமணியே நான் சொல்லுகிறேன் (317)

சேர்மக்கடவுள் பூவுலகில் தன் சடத்திற் புகுந்திருத்தல்.

சிவபதந்தன்னி லரசா யிருந்திடுஞ்
சேர்மனெனு மீசனுன வனே
பவவினை தீர்த்திடும் பங்கயனோடு மால்
பார்த்துப் பரிவோடு தானுரைப்பான் (318)

கயிலாயந்தன்னிலே தேவர்களோடு நான்
காரியமானதோர் காரணத்தை
செயலாகச்சொல்லவும் வையகந்தன்னிலே
சேர்மெனெனச்சொல்லப்போய்ப் பிறப்பேன் (319)

என்று திருவாய் மலர்ந்தருளி யுடன்
யேந்தல் வசிக்கும் புதுக்குடியில்
சென்றுசிவனணைந்தம்மாள் வயிற்றினிற்
றிட்டமதாகப் பிறந்தீரே (320)

ஏறல் நகருக்கிருபது பிராயத்தில்
யேகியங்கே போயிருக்கையிலே
சேர்மனெனப்பெயருண்டாகி யங்கே
சேர்ந்தவயசிருபத் தெட்டிலே (321)

மரணத்தைநக்காட்டிங்கே வந்தீரே யெங்கள்
வரத்துக்கெதுமுறை செய்தாய் நீ
தருணமிது புவிதன்னிற் பிணிதுன்பத்
தாலயரு மனு வென்றனே. (322)

மனுக்கள்துயர் பிணிமாரப் பிறந்திடும்
வள்ளலாஞ் சேர்ம செகதீசன்
அனுக்கமான திருமாலயன் றன்னோடு
மக்குரைந் தோர்க்கெல்லாந் தானுரைப்பான். (323)

சிறந்தபுவி தனிலென்னுட நாமத்தைச்
சேர்மக் கடவுளெனத் துதிக்க
இரந்த சடத்திற்குடி கொண்டிருந்துமே
யேவல்பிணி துயர்தீர்ப்ப னென்றான் (324)

இனியென்னால் வஞ்சகமில்லையப்பா நீங்க
ளெல்லோரும் வாங்களெனக் கூட்டி
தனியீசன் சேர்மக்கடவுள் தலம்வந்து
சடத்திற் குடிகொண்டு தங்கினனே. (325)

கள்ளர்நகை திருடவருதல்.

ஈசன் குடிகொண்டிருந்த வுடனேயே
யெம்மையாளுஞ் சேர்ம யீசனுக்கு
பாசமா யிட்டநகைகளைக் கள்ளர்
பறிக்கவேணு மென்று வந்தாரே. (326)

கள்ளர்கள்கூடிச் சமாதியைத் தோண்டென்று
கய்யாலே தொட்டுப் பறிக்கயிலே
மெள்ளவே யீசன் பாம்பாவெளியேறி
விரட்டிடக் கள்ளர் வீறிட்டாரே (327)

ஆளுக்கொருதிக்கு வோடினரே பாம்பு
மவரவர் பின்னால் விரட்டினதே
மேளமானகள்ளர் பயந்து விழுந்து
வேகமா வோடியே வீடடைந்தார் (328)

மைக்காநாள்க் கள்ளர்கள் கூடியிருக்கையில்
வந்ததென் பின்னென்றொருவன் சொன்னான்
தக்கதோர் பாம்பால்நான் சங்கடப்பட்டது
தலைதப்பினேனென் றொருவன் சொன்னான். (329)

என்னைத்தானப்பா விரட்டினது நீங்கள்
யெல்லோருஞ் சொல்வது யில்லையில்லை
நன்னயமான பாம்பால் நான்பட்டது
நாத்தடுமாருதே யிப்போ வென்றான். (330)

திக்குத்திசைமாறி யொருவன் போனவழி
தெரியாமல் நாமள் வோடினமே
பக்குவமான சமாதி பரிக்கையிற்
பாம்பொன்று தானே யெனப்பகர்ந்தார் (331)

அந்தநகைப் பேச்சிப் பேசவுங்கூடாது
அங்கே தெய்வமொன்று தானிருக்கு
விந்தையாகக் கொஞ்சநாளைக் குள்ளாகவே
விதங்கள் தெரியுமென்றே யிருந்தார் (332)

பரச்சிக்கி நோய்தீர்த்தல்.

புதுக்குடிதன்னிற் பிறந்தவள் சேர்மற்குப்
பூரிபமான யடிமை யாழாம்
பிதுக்கமில்லாம லடிமைத் தொழில்களைப்
பின்னமில்லாமலே செய் திடுவாள் (333)

வேலைகள்செய்து வருகையிலே யவள்
மேலெங்கும் பத்து விளுந்ததினால்
மூலிகள்கற்றிடுஞ் சேர்ம ரிருக்கையில்
மூரிடும் நோயையுஞ் சொன்னாளே (334)

பெரியவியாதிகள் போலே யிருக்கிதே
பிளைக்கவும் நானும் போறேனே
சொரியல் பொருக்க முடியாதெனக்குச்
சுகமாக்கு சுவாமியே யென்றழுதாள் (335)

சேர்மனவர்தானு மேது செய்தாரொரு
செம்பிலே தண்ணீருந் தானெடுத்து
ஒரும்பவரணை ரெண்டுக்குச் சாப்பிட
வோதிக் கொடுத்திடத்தான் குடித்தாள் (336)

பாதிக்கிமேலாய் வியாதிகள் தீர்ந்தது
பரச்சியெனு மடியாள் வட்கு
நீதிசெலுத்திடுஞ் சேர்மயி சமானும்
நேருஞ் சிவபதஞ் சென்றுனே (337)

பரச்சிக்கி வியாதிமுத்தி யல்லோயவள்
படுந்துயர மிக்கான தினால்
குரச்ச வியாதியுங் கூடினதாற்சேர்மக்
கோமான் சமாதியிற் போயழுதாள் (338)

தெய்வம்போலெந்தன் வியாதியைத் தீர்த்தாய்நீ
சேருமச்சாமி யென்றே யழுதாள்
அய்யன் கடவுளுக்கே யிரக்கம்வந்து
அன்று கனவி லுரைத்தானே (339)

சேர்மனைப் போலவே வந்துநின்றுமிகத்
தேம்பியழுகும் பறை மகளே
ஓர்மனதாகவே தாம்பிர நதியினில்
வுற்ற சலத்தினில் மூள்கிடுவாய் (340)

செம்பிற்சலத்தை முகந்துவந்து வாயைத்
திரகாமலென்னை நீ சுற்றிவந்து
நம்பிக்கையாக யென்னுலேயம் முன்விட்டு
நாவிலே மூன்றுகை சாப்பிடுவாய் (341)

அச்சணந்தன்னிலே வோடும் வியாதியும்
அன்புள்ளடி யாளென மறைந்தார்
நிச்சயமாகவே சாமி கனவினில்
நேரும் பறச்சி முளித்தாளே (342)

முளித்த பறச்சியெழுந்திருந் தேயவள்
மூரிடு நோயுந்துலைந்த தென்று
களித்தானந்தங் கொண்டு தாம்பிரநதியெனுங்
கங்கையிற் போயி முளிகினளே (343)

கங்கையைவிட்டு வெளியேறி யவள்
கய்யினிற் செம்பிற்றண்ணீ ரேந்தி
நங்கைபறச்சி நாயகன் சன்னதி
நடந்து சுத்திமுன் விட்டாளே (344)

தரையினில் விட்டிடுங் தண்ணீரமண்ணொடு
தானள்ளிச் சாப்பிட்டாள் தக்கபடி
பறைமகள் பாவம்பிணி முதற்றுன்பமும்
பஞ்சாய்ப் பரந்துமே வோடினதே (345)

பரஞ்சுடராஞ்சோதி பறைமகள் தனக்குப்
பங்க வியாதி பரக்கடிக்க
சிரந்திடுமேனிப் பறச்சி யனுதினஞ்
சேர்மக் கடவுளைச் சிந்தித்தளே (346)

பறச்சியிருக்கும் பக்தியைக் கண்டவர்
பாவப்பிணி துயர் மாற்றுமென்று
திறமாமனதில் நினைத்துமவர் தினஞ்
சேர்மக் கடவுளென்றே துதித்தார் (347)

துதித்தவர் துன்பப்பிணிதுயர் நீங்கிடச்
தூர தேசத்துச் சனங்களெல்லாம்
கதிக்கிதுதானே யெனவரும் பேர்களைக்
கண்ணு லளக்க முடியாதே (348)

சேர்மெனே மாடுமேய்க்குஞ் சிருபையன்கண்டது.

மாடுகள்மேய்க்குஞ் சிருபையனைப் பார்த்து
வாடா சிருவனே யென்றழைத்துப்
போடாபயலே யென்றந்தச் சேர்மனும்
போயோடி மாட்டை முடுக்கினனே (349)

ஆற்றுக்கரைதனில் மேய்ந்திடு மாட்டையு
மாங்காரமாகவே சேர்ம துரை
சீற்றமதாக முடுக்கு வதைக்கண்டு
சிருவனழுதுமே வோடினனே (350)

திருவடியான் விளைநகரத் தனைவருஞ்
சேர்ந்து யிருக்கிற பேரதிலே
அருமையான பய்யனழுகு வதைக்கண்டு
அடித்தது யாரென்க் கேட்டாரே (351)

சேர்மனதட்டி யென்மாட்டை விரட்டுரு
சிராக மேயவிடானு மில்லை
ஆர்சொன்னாலு மவர் கேள்க்கமாட்டெடென்கிறு
ரானதினாலே யழுதே னென்றான் (352)

என்னபுதுமை யிதுவென யெல்லோரும்
மேகியந்த யிடம் பாற்கயிலே
சொன்ன பய்யனுறை கண்டாரேயல்லாற்
தோற்றமங்கே வொன்றுங் காணாரே (353)

ஆச்சரியமாக யெல்லோரு மங்கே
யானந்தக் கூத்து மகிழ்ந்தாடி
வாச்சிது தெய்வஞ் சேர்மக்கடவுளாய்
வந்தெம்மை ரஷப்பா ரென்றுரைத்தார் (354)

இந்தவிதமாகச் சேர்மக் கடவுளை
யிங்கேகண்டே நானுமங்கே கண்டேன்
பந்தம்விலக்குங் கடவுளிவ னெனப்
பலபேரும் போயி வணங்கினரே (355)

அமரபச்சத்து வம்மாவாசை தனில்
அப்பன் சமாதியடங்கி னதால்
சமமாய்ப் பிணிதுயருள்ளவர் வந்து
சரியாய் வணங்கவுந் தீர்ந்திடுமே (356)

பூரணமான பவரணை தன்னிலே
பூசிக்க வந்திடும் பேர்பிணியை
ஆரணமோதிடுஞ் சேர்மக் கடவுளும்
அப்போ பிணியைத் துலைப்பாரே (357)

வெள்ளிக்கிழமை பகுத்தியுடன் வந்து
வித்தகன் சேர்மக் கடவுளையும்
கிள்ளைமொழியொத்த மாதர் துதித் திடக்
கேட்ட வரங்கள் கிடைத்திடுமே (358)

பாம்புகடித்த சனங்களைக் கொண்டுபோய்
பரமன் தலத்தினில் மண்ணெடுத்து
விப்புகூராமலே சேர்மன் காப்பென்னவே
விரைந்து பூச விசந்திருமே (359)

என்னகடி விசமானாலு மப்பன்
ஈசனுஞ் சேர்மன் காப்பையள்ளி
நன்னயமாயகத் தழுக்கரச் சாப்பிட
நகண்டு வோடும் பலவிசமே (360)

செங்குட்டங் கருங்குட்டந் திரேகத்தில்மீரிடச்
சேர்மக்கடவுள் தன் காப்பையள்ளி
அங்கஞ்சுகம்வர நல்லமனத் தோடே
யருந்திடத் தீர்ந்திடு மன்னோயும் (361)

மண்டையடி காச்சல் வயிற்றுவலிகளும்
வாந்தி நமுக்கலும் வந்தாலும்
கண்டத்திலே விசம் வைத்திடுஞ்சேருமக்
கடவுள் தன்காப்பினாற் றீர்ந்திடுமே (362)

பற்பலவியர்தி களானாலும் மனப்
பத்தி பகுத்தி யுடையோர்க்கு
அற்புதமான தோரீசன் சேர்மன்காப்பை
யள்ளி யருந்திடத் தீர்ந்திடுமே (363)

வயிற்றிலிருக்குங் குழந்தை முதலாக
வயசு சென்ற பெரியோர்க்கும்
அயற்றும்பிணிதுயர் தீர்த்திடுஞ் சேருமெ
னப்பனீசன் செயலா ருரைப்பார் (364)

கண்ணுந்தெரியாத பேர்கள் பகுத்தியாற்
கண்ணும் வெளிச்சங் களுண்டாகி
எண்ணுந் தெளிவாயிருந்தது போலவே
யிருக்கிரதெத்தனை கோடி சனம் (365)

சேர்மென் காப்பைக்கூறல்.

மறையோர்முதலாக மற்றுள்ள வர்களும்
வந்து செம்பிற்தண்ணீர் கொண்டுவந்து
இறைய வணுகிய சேர்மக்கடவுளை
யெண்ணி வாய்பேசாமற் சுத்தனுமே (366)

சுற்றி வந்தவுடன் றாயன்ற லத்தில்முன்
சூடச் சுடரினுக் கேயருகே
பற்றுதலாகத் தண்ணீரைத் தரையிட்டாற்
பரஞ்சுடர் சேர்மன்றன் காப்பாமே (367)

முல்லையரும்பையும் முத்தையு மொப்பிடும்
மூரல் நகையாளே சுரதமணி
எல்லையிலீசனுஞ் சேர்மனருள் தனை
யின்னமுஞ் சொல்வதைக் கேளடிநீ)368)

பெண்களைப்பிடித்த பேயிநீங்குதல்கூறல்.

அண்டசரா சரத்தானு மடங்கலு
மாகிய வப்பன் தலத்தினிலே
பெண்டுகள் தானஞ்செய்து முன்னேநின்று
பேயாடுஞ் செய்தியைச் சொல்லுகிறேன் (369)

மங்கையர்தங்கட்குப் பேய்பிடித்த தென்று
மந்திர வாதியைத் தானழைத்து
தங்கியவச்சரந் தகட்டி லெழுதிடத்
தானு மடங்காத பேய்களுமே (370)

சேர்மக் கடவுளிருக்குந் தலத்தினிற்
றேன்மொழியாள் வந்து நின்றவுடன்
பார் மீதிலாடிப்புரண்டு பேர்சொல்லியே
பற்றலை யிவளை யென்றோடிடுமே (371)

ஈனப்பிசாசுப் பேயிவளைப் பிடித்தது
யெப்போதும் போகாதென் றெண்ணினது
ஞானவான் சேர்மக்கடவுள் தலத்தினில்
நான்போரே னென்றுமே வோடிடுமே (372)

மொண்டிப்பேய் தானும் பிடித்திடுமங்கையை
 மொண்டியாடச் செய்யும் போகாது
அண்டமுந்தானான வப்பன் தலத்திலே
 யடிக்கிறார் போரே னென்னோடிடுமே (373)

திண்டுமுண்டு பேசிமங்கை யுமாடிடுந்
 தெருவில் வெட்டிட்ட பேய்போகாது
வண்டணி பூங்குழற்பாகன் றலத்தினில்
 வாட்டிரார் தீயிட்டென் றோடிடுமே (374)

கிணத்தில்விழுந்து யிரந்தபே யெப்போதுங்
 கிளி மொழியாளை விடேனென்றது
பணத்தலைப் பாம்பணிச் சேர்மன்றலத்தினிற்
 பார்க்கிறார் போரே னென்றோடிடுமே (375)

எங்கே போனாலுமிவளை விடேனென்று
 யிடேற வொட்டாமற் செய்திடும்பேய்
கெங்கைச் சடையணிச் சேர்மன்றலத்தினில்
 கிர்கிரார் கெஞ்சை யென்றோடிடுமே (376)

நகண்டு யிரந்திட்டு நங்கையொருத்தியை
 நான் பிடித்தேனென்று போகாதபேய்
அகண்டருள் சேர்மக்கடவுள் தலத்தினி
 லடித்தார் பிரம்பிட் டென்றோடிடுமே (377)

தகையானபெண்ணைப் பிடித்தது போகாமற்
 றழுர்ந்திடச் செய்யுஞ் சடாமுனிப்பேய்
செகதீசனாகிய சேர்மன்றலத் தினிற்
 றீயினாற் சுட்டாரென் றோடிடுமே (378)

ஆன்றறிவில்லாமற் குத்தாலே செத்தபே
 யரிவையறை விட்டுப் போகாதது
மூன்றும்பிறை யணிச்சேர்மன் றலத்தினில்
 முள்ளா லனாந்தா ரென்றோடிடுமே (379)

வண்டர்கள்செய்திடும் நஞ்சினாற் செத்தபேய்
மங்கையரைத் தொட்டுப் போகாது
கண்டங் கருத்திடுஞ் சேர்மன்றலத்தினிற்
காலா லுதைத் தாரென் றோடிடுமே (380)

சித்திரமாகக் கயர்போட்டி ரந்தபேய்
சிற்றிடையார்களைத் தான் பிடித்து
வித்தகன் சேர்மக்கடவுள் தலத்தினில்
விந்தையா யாடிப்பின் னோடிடுமே (381)

பேய்பிடித்தாடிடும் பெண்ணுகளே பேயைப்
பேரைச் சொல்லென்பதும் பெண்ணுகளே
நீயாருயென்பதும் பெண்ணுகளே பேயை
நில்லடா வென்பதும் பெண்ணுகளே (382)

போபோபே யென்பதும் பெண்ணுகளேபேயும்
பேகேனென் றென்பதும் பெண்ணுகளே
நீவாபேயென்பதும் பெண்ணுகளே சேர்மன்
னிற்காரென்ற பேயும் பெண்ணுகளே (383)

விலங்கிட்டா ரென்பதும் பெண்ணுகளேபேயும்
விலகிரே னென்பதும் பெண்ணுகளே
கலங்கியழுதபேய் பெண்ணுகளே சேர்மன்
கட்டியுருட்டும் பேய் பெண்ணுகளே (384)

தீயைக் கொளுத்தி யெரிக்கிறதினாலே
சேர்மக் கடவுளே போரேனென்று
வாயைத்திரந்து வளுத்திய பேய்போச்சு
மங்கை நானென்பதும் பெண்தானே (385)

இந்தவிதமாக யீசனுஞ் சேர்மனும்
யிந்த விளையாட்டுத் தானடத்தி
விந்தையாய்ப் பேயும் நோயுந்துன்பங்களும்
விலகிச் சனங்கள் துதித்தாரே (386)

ஆடுமாடுமுதலான மிருகத்துக்
கானவியாதி பலவினையும்
தேடரிதானதோர் சேர்மக்கடவுளுந்
தீர்த்துச் சுகத்தோடிருக்கிறதே. (387)

சதாசிவமய்யரை யேறலூருக்கு வரச்சொன்னமைகூரல்.

இப்படியாகிய சேர்மக் கடவுளாய்
யேறல் நகரி லிருக்குகிறேன்
அப்படியந்த நகரத்தில் நீயென்னை
யஞ்சு முருகியடி தொளுவாய் (388)

தொழுது வணங்கவுன்சுரதை வயிற்றினிற்
சுதன்ரெண்டு தோன்று மெனவுரைத்து
பளுதில்லாயீசன் மரைந்தான் கனவெனப்
பதறிமுளித்தேண்டி சுரத மணி (389)

சதாசிவமய்யர் யேறலூருக்குப் பிரையாணங்கூரல்.

என்னசொல்வேனடி யீசன் மகிமையை
யேறல் நகற்கு நானேகுகிறேன்
நன்னயமாக நீ வீட்டிலிருந்தந்த
நாதனைத் தோத்திரஞ் செய்திடுவாய் (390)

போயந்தச் சேர்மக்கடவுளை நானுமே
பொங்கமுடன் மிகப் பூசைசெய்து
ஆயுந்திரத்துட னப்பன் கிருபையால்
அவசரமாய் வாரே னென்றனே (301)

சுரதமணியெனும் பத்தினி யானவள்
தூயகணவன் முகம் நோக்கி
வரதன்செகதீசன் சேர்மவ தாரமாய்
வந்து யிருந்திடு மேறலிலே (292)

தாங்களேகண்டு தெரிசிக்க வென்றுமே
தங்கள் மனதி லிருக்கிறதே
பாங்கான தங்கட்குப் பத்தினியாகியும்
பாவியு நானுகிப் போனேனே (393)

கூடவர மனமில்லாதுனாலே நீர்
கூருந்தலத்திற்குப் போய் வருமுன்
ஆடவர்போற்றிடு மன்புள்ள பத்தாவே
யரும் பதவியாகிப் போவேனென்றாள் (394)

பதவிக்கி நானாவேனென்றுரையா தேடி
பத்தினியாளே சுரத மணி
சுதன் வரங்கேட்கவே யேறல்நகருக்குத்
தோகையே கூடவா வென்றானே (395)

வாவென்று சொல்லச் சுரதமணிக்குமே
வந்தது சந்தோச மப்போது
பாவொன்று பாடியே யேறல்நகருக்குப்
பரமன் பதந்தொழப் பயணமானார் (396)

பிரயயாணமாகியே கோதாபுரி தன்னிற்
பேரானற யில்வண்டி தானேரி
துரையான கெடிகளனேகங் கடந்துமே
தூத்துக்குடி நகர் வந்தாரே (397)

வந்தவுடனந்தச் சுரதம ணியுடன்
வாகான ரோட்டு வழிநடந்து
சிந்தைமகிழ்ந்தந்தச் சேர்வைகாரன் மடஞ்
சீக்கிரமாய் வந்து சேர்ந்தாரே (398)

அந்தநகரத்தி லாயாசந்தான் தீர்த்து
அதைவிட்டுத் தெற்கே வழிநடந்து
சிந்தைமகிழ்ந்தந்த யேறல் நகருக்குச்
சீக்கிரமாகப் போய்ச் சேர்ந்தாரே (399)

ரோஸ்மகிட்சி கூரல்.

[illegible]
பேதை சுரத மணியவளும்
ஏராளக் கூட்டத்துடனடி பேச்சிட
யெங்கு மிடமில்லை யென்றானே (400)

பப்பப்பய்யக் காலடி பேற்துவைத்து
பாவையரே பின்னல் வாடியென்று
அய்யன் சதாசிவமய்யரு மப்போது
அதிசயம் பார்த்துமே போனனே (401)

போகுஞ் சமயத்திற் சேர்மக்கடவுட்குப்
பூசனைக்குப் புஸ்பம் வாங்கவென்று
தாகமதாகச் சனம் போரசங்கத்தை
தான் பார்த்துச் சந்தோஷமானனே (402)

கூடமுஞ் சாம்பிராணிப் பத்திவிற்குங்கடை
தோகையே யெத்தனை யாயிரமோ
ஏடவிள் பூமலர்மாலை விற்குங்கடை
யெத்தனை கோடியென்றே யுரைப்பேன் (403)

இன்னம் பலவிதயாபாரஞ் செய்கடை
யெத்தனைகோடி யெனச் சொல்லுவேன்
நன்னயமான சனம் வருங்கூட்டத்தை
நம்மா லுரைக்க முடியாதே (404)

பெண்டுபிள்ளையுடன் வாரசனங்களைப்
பிரமனலுஞ் சொல்லமுடியாதே
வண்டிகள் மாடுடன் வாரதுபோரதை
வாக்கா லு ரைக்க முடியாதே (405)

அய்யன் சதாசிவமாகிய வய்யரும்
அம்மை சுரத மணியாளும்
செய்தவத்தோர்கள் முழுகுந் தாம்பிரநதி
சேர்ந்துடன் முங்கி யெழுந்தாரே (406)

செம்பிற்சலங் கொண்டு வாயினற்செப்பாமற்
சேர்ந்து யிருவருந் தானடந்து
நம்பிக்கையாகவே நாதன் சேர்மன்றலம்
நாடிவந்தே வலஞ் சுத்தினரே (407)

சுத்திமுன்னிற்கவுந் தூய தண்ணீரினைச்
சுயம்பான சேர்மக்கடவுள் முன்னே
பத்தியா விட்டுடன் பண்பாயிருவரும்
பாடத் துடங்கினர் தேவாரம் (408)

கும்மிச்சீர் முற்றிற்று.

சிவமயம்.

சதாசிவமய்யரும் சுரதமணியம்மாளும்,

தேவாரம்படித்தல்.

பொன்னார் மேனியனே-என்றமெட்டு.

சிவனே செகதீசா திவ்விய சேர்மவதாரமென
பவவினை தீர்த்தருள யிந்தப் பதியிலமர்ந்தவனே
புவனத்தோர் புன்பிணியை சிவபுங்கவா போக்கவென்று
கவனத்தோடே மதித்து மிகுகண்காட்சி தந்தவனே (சிவ)

சிரார் புதுக்குடியில் கற்பின் சிவனணைந்தாள் வயிற்றில்
பேராரும் பிள்ளையெனச் சேர்மபித்தனே நீபிறந்தாய்
ஏராரு மின்னகரில் வயசியிருபதி லெய்தியதை
காரார் கயிலைதன்னை மிகக்காட்டி யுரைத்தவனே. (சிவ)

சந்தோச மாகவேதான் கயிலைத்தலத்திலுந் தானிருந்தும்
விந்தை யுடனேறல் நகரில்விரைவி லமர்ந்தவனே
பந்த பாசமகற்றி எந்தன்பாவவினை தீர்த்து
சிந்தனை யில்லாத எனக்குச்செய் தவந்தந்தவனே (சிவ)

மார்க்கண்டர் சன்னதியில் நாங்கள்வந்து வணங்கயிலே
தீர்க்க தெரிசனைக்கு யெனக்குத்தியக்கங் கொடுத்தவனே
கார்க்கும் புவிமறைத்து யெனக்குக்கயிலை காண்பித்தவுடன்
ஆர்க்கு முடியாத யிருப்புவடுத்துக் கொடுத்தவனே (சிவ)

பக்கமிருந் தெனக்கு யிந்தப்பாரில் நடந்ததையும்
மிக்கவே யென்னிடத்தில் முன்னேவிரும்பி யுரைத்தவனே
தக்கமறை புகழும் சிவதத்துவ மானவனே
அக்குவணிந்த வனே யென்னையாளும் பராபரனே (சிவ)

சேர்மக் கடவுளென்று யிந்தச் செகதலத்தோர்களுக்கு
நேர்ந்த குறிகாட்டி யெங்கும்நின்றருள் செய்பவனே
ஓர்மன மாவுருகி வுன்னைவுடையவனை நினைக்க
பார்வை யருளதினால் பிணிபாவம் பறக்கவைப்பீர் (சிவ)

ஈசாக யிலையிலே யென்னையிருத்தி யுரைக்கயிலே
வாசமாச் சேர்மனென யேறல்வந்து யிருந்தபின்பு
பாசமாய்ப் பதவிசென்று புவிபாலித்து நானிருக்கேன்
ஆசையாநீயு மங்கே வந்தென்னடி தொழுவென்றாயே (சிவ)

சுரதமணி வயிற்றில் யிருசுதன்களுந் தோன்றுமென
வரதனேகயிலை தன்னில் நல்லவாக்கருள் தந்தாயே
கரதல மேற்குவித்து வுன்காலில் வணங்கினனே
குறைவு களில்லாமற் சொன்னகுழந்தைதா வென்றானே (சிவ)

வணங்குஞ் சமைபமதில் சுரதமணியெனுங் கற்புடையாள்
கணங்குளே சேர்மனெனும் நல்லகடவுள் பதம்பணிந்தாள்
மணங்கொண்ட சுரதமணி புத்திரர் வயிற்றிலவதரிக்க
யிணங்கி யெனக்குவரம் சேர்மயீசாதா வென்றனளே (சிவ)

சுரதமணி யவளும் நல்லதூயசதாசிவமும்
விரதமாச் சேர்மனென மிகவேண்டியே நிற்கயிலே
சரதமா யீசனெனும் சேர்மச்சாமியு மாகாயத்தில்
பரதமா யசரீரி வாக்குப் பாலர்தந்தேனென்றதே (சிவ)

அசரீரி வாக்கதையும் நல்லவய்யர் சுரதையுடன்
நிசமென்றே கேட்டவுடன் நிலம் நில்லாமலாடினரே
திசை யெட்டுந்தான் வணங்கும் அப்பன்சேர்மக்கடவுள்முன்னே
பிசகாமற் சோபனங்கள் சுரதாய்பெம்மான் முன்னுடிடுவோம்

சதாசிவம்ய்யரும் சுரதமணி அம்மாளும்

சோபனமடித்தல்

சோபனமடி சோபனமடி சோபனமடி சோபனம்
சோபனமடி சோபனமடி சோபனமடி சோபனம்

ஏறநகரிலே பிறந்த ராமசாமி புதல்வனே
பாரிலிவனே யீசனென்று பாடியடிப்போஞ் சோபனம்

காமனெனவே யழகிற்சிறந்த கர்த்தனிவனே யின்றிடும்
ராமசாமிக் கிணங்குமக்கள் நன்றாய்த் தழைக்கச் சோபனம்

வாமமேகலை யுமையாளுக்குப் பாகனான யீசனே
நேமமாகச் சேர்மக்கடவுளெனவே சொல்லிச் சோபனம்

சேர்மக்கடவுளெனவே சொல்லிச் சிந்திப்பவர்க் கெந்நாளும்
நேரில்வந்து கிருபைசெய்ய நித்தியசுப சோபனம்

சிவத்தக் கருப்பய்யா வாக்காற் சேர்மன்கும்மி சொல்லவே
தவத்தோனவனு மனவிமக்கள் தழைக்கயடிப்போஞ் சோபனம்

செகத்திலீசன் சேர்மன்புகழைச் செப்புமவர்தஞ் சிந்தையாம்
அகத்திலுறையு மப்பன்கும்மி யடிப்பவற்கே சோபனம்

ஆசையுடனே கேட்பவற்கு அன்பாய்ப்படித்துச் சொல்லவும்
ஈசனான சேர்மக்கடவு ளின்பந்தரவே சோபனம்

செய்யுளாகச் சேர்மன்கும்மி செப்பமுடனே யெழுதிட
அய்யன்சேர்ம யீசனவனே யாதரிக்கச் சோபனம்

கும்மிபாடப்பொருள் கொடுத்தேயச்சிட்டவர் குலங்களே
எம்மையாளு மீசன்காத்து யிருக்கவடிப்போஞ் சோபனம்

வாழிசேர்மக் கடவுள்வாழி மாதவங்கள் வாழியே
வாழிவாழி வையகத்தில் மானிடர்கள்வாழியே சோபனம்

சதாசிவமய்யர் சேர்மக்கடவுளிடத்தில்

விடைசொல்லிக் கொண்டேகுதல்

விருத்தம்

ஆசருமறைக ளாறு சாஸ்திர மடங்கா நின்ற
தேசுரு கனியே ஞானத்திக ழொளியருளே தேவே
யீசனேகயிலை தன்னிலிசைத்திடும் வரத்தைப்பெற்றேன்
ராசமயேந்சிரஞ் சில்லா நாயகியுடன் நான்போறேன்

பாடியே போறேனென்று பதந்தொழுஞ் சதாசிவய்யர்
சூடியமலர்ப் பூங்கூந்தற் சுரதமா மணியிேனாடு
நாடிய யேறல்நீங்கி நகர்பல கடந்து சென்றே
யாடிய நடேசர் வாழுமணி நகரடைந்தான் மாதோ

கங்கைசடை யணிந்தாடு மீசன்றன்னைக்
கண்டுகளித் தானந்தமாகப் பாடி
துங்கவனைத் தோத்தரித்துத் தொழுது போற்றித்
துணைவியொடு யெங்கள்நகர் போறேனென்று
மங்கையெனு முமைமுன்னே வழுத்தி யேற்றி
வழிநடந்து பலதலங்கள் தெரிசித்தேகித்
தங்கள்பதி ராசமயேந்திரஞ் சில்லா
தனையருமா தேவியுடன் றழைத்தான் வாழி

ஆரணமா மறைகமழுஞ் செசதீச
னவதாரஞ் சேர்மனு யமைந்தகும்மி
பூரணமா வுலகினிலே பாடினேனும்
புதுமையெனுங் கவியிதனை யெழுதினேனும்
காரணமாப் பொருள் கொடுத் தச்சிட்டோர் தானுங்
களிப்புறவே படித்திடவுங் கருதினோரும்
வாரணம் போற்றலை யசைத்தே மகிழுவோரும்
வம்மிசங்கள் வையகத்திற் றழைக்க வாழி

ஜெகதீசன் சேர்மனவதாரக் கும்மி

முற்றுப் பெற்றது.

உ

சேர்மக்கடவுள் அவதாரஞ் செய்த

கதையின் வரலாறு

பூவுலகத்தில் ஜெகதீசன் சேர்மெ னவதாரம் வெளியிடப் பட்டதற்கு
காரணம். ஏறல்மா நகரத்தில் மகா-ள-ள-ஸ்ரீ கி. மூ. ராமசாமிநாடா ரவர்கள்
புத்திரர் அருணசலநாடர் யென்று நம்மைப்போலொற்ற மானிடராகயிருந்து
கெவர்ன்மெண்டு உத்தியோகஸ்தராக சேர்மென்வேலைபார்த்து விவாஹத்தை
மறுத்தும், லட்சரூபாய் ஐவேசு யிருந்தும் இருபத்தேழுவயது முடிந்து இரு
பத்தெட்டாவது வயதில் சிவபதவி அடைந்தவுடன் தாம்பிரநதிக் கரையில்
சமாதி வுண்டானதின் பிற்பாடு தன் கழுத்திலணிந்த சுமார் நாலாயிரரூபாய்
பெருமான ஆபரணங்களை கழட்டாமலடக்கஞ் செய்ததை யறிந்த சில கள்
ளர்கள் சமாதிதோண்டி எடுக்க எத்தனம்செய்த பேர்களை பாம்பாக வெளி
யேறி விரட்டியும், மாடுமேய்க்கும் சிறுபையன் சேர்மனைக்கண்டும், பரச்சிக்கு
பெருவியாதியைத் தீர்த்தும், சகலவியாதியஸ்தர்கள் தரிசிக்கிறதும், பக்தி
யுள்ளவர்க்கு வியாதியை சொஸ்தப்படுத்துகிற விஷயமும், சில ஊர்களிற் சேர்
மக் கடவுள் பீடம்போட்டுச் சகல சாதியார்கள் வணங்கியும், ஏராளமான
ஸ்திரீகளுக்கு பேய்பிடிச்சாடித் தீர்க்கிறதும், கண்தெரியாதவர்களுக்கு கண்
தெரியவும், தீராத வியாதிகள் தீரவும், பிள்ளையில்லாதவர்களுக்கு பிள்ளைத்
தரித்திரம் நீங்குகிறதும் இன்னும் அநேக கண்காட்சிகள் அற்புதமாய் நடந்து
வருகிறதை அறிந்தாரே அல்லாமல் உலகமனுக்கள் செகதீசன் சேர்மெ னவ
தாரஞ் செய்தது வொருவருக்குந் தெரியாது ஜெகதீசன் யென்பது எப்படித்
தெரிந்ததென்றால் ராஜமயேந்திரஞ் ஜில்லாவிலிருந்து ஏறல்மா னகரத்துக்கு
சதாசிவமய்யரும் சுரதமணியம்மாளும் பிள்ளை வரத்துக்குவந்து சேர்மென்
ஸ்தலத்திலே நின்றுகொண்டு ஆனந்தமாக வணங்கிச் சொன்னார்கள். யாரா
லும் காணமுடியாத கண்காட்சியாதெனில். சதாசிவமய்யரும் பத்தினி சுர
தமணியம்மாளும் இவர்களுக்குப் புத்திரசந்தான மில்லாத வருத்தத்தை முன்
னிட்டு தலவிசேடங்களைப் போய்த்தெரிசிக்க வெளியேறி கோதாவரிநதி தீர்
த்தமாடி மார்க்கண்டேஸ்வரர் சன்னிதானத்தை தெரிசித்துக் கொண்டிருக்
கும்பொழுது ஷை அய்யருக்கு வோர்மயக்கமானது உதித்து பேரறிவுண்டாகி
பூலோகம் மறைந்து கைலாசமாகிய வெள்ளியங்கிரிமேல் வீற்றிருக்கும் சிவ
பெருமானருளைப் பெற்ற தொண்டரைப்போல் பணிந்துநிற்க கடவுள் கண்
ணோக்கி சதாசிவா உனக்கு குளவிகிடைக்கும் வகை கூறுகிறேன் கேளென
மேற்கண்ட தொண்டன் சிரம்வணங்கி திருவாக்கா லடியேனுக்கு திருவுள
மிறங்க வேண்டுமென, யீஸன் கருணைகூர்ந்து பூலோகத்திலுள்ளஸ்தலங்க
ளை தெரிசிக்க நாரதமுனிவர் போயினர். அங்கே மனுக்கள் நடத்தை தெய்
வலோகத்தில் தேவேந்திரனிடத்திற் சொல்ல பூவுலகத்துக்குடைய துன்பத்

தை தனக்கென்றே யெண்ணிய இந்திரன் தேவர் கூட்டத்துடன் பிரமலோ
கம் போய் நான்முகக்கடவுளிடம் தெரியப்படுத்தநான்முகக்கடவுள் வைகுந்த
லோகம் கூட்டிக்கொண்டு போய் மகாவிஷ்ணுவிடம் தெரியப்படுத்த மகா
விஷ்ணு அவர்களைக் கூட்டிக்கொண்டு இந்தக்கயிலாயத்தை நாடி வந்து என்
னிடம் தெரியப்படுத்தினதால் நான் மனுக்களுக்காக யிரங்கி அவர்களிடத்தி
ல் நான் ஏறல்மாநகரத்தில் கீழ அருணாசலநாடார் புதல்வன் ராமசாமிநாடார்
உமரிநாடார் மகளை மணம்புரிந்து ஏறலுக்கு வந்து தன் கிராமம் புதுக்குடியி
லிருக்கிறதில் போய்ப் பார்த்து அனுபவிக்கிற காலத்தில் புத்திரனாக சிவன
ணைந்தம்மாள் வயிற்றில் பிறப்பேன் இருபது வயதில் தாயார் சிவபதமடை
வாள் பின்பு ஏறலூருக்குப் போய்கீழவேலைபார்த்து வேலையை நீக்கி கலெக்
டர் துரையவர்களால்சேர்மன் உத்யோகவேலை கிடைத்து சேர்மனெனபோகி
சகல மந்திரசித்துகளையும் படித்து இருப்பத்தெட்டாம் வயதில் மரணதத்துவ
மாகிச் சிவபதம் வந்து பூவுலகத்தில் ஏறல்மாநகரில் என் சடக்தில் குடிகொ
ண்டிருந்து மனுக்களை ரட்சித்துக் கொண்டிருக்கிறேன் நீஅங்கேவந்துஎன்னை
வணங்குவாய் உன்பத்தினி சுரதமணி வயற்றில் நல்ல இரண்டு புத்திரர் தோ
ன்றுமென்று கனவில் திருவாய் மலர்ந்தருளினதை சதாசிவமய்யர் சேர்மக்க
டவுள் முன்னே நின்று கொண்டு நீ முன்னமே சொன்ன குழந்தைகளைத் தர
வென்று கேட்கும்போது அங்கே கண்காட்சியாற் கண்ட பெரியோர்களால்
வெளியிடப்பட்டிருக்கிறது.சுபம் சுபம்.

முற்றிற்று